விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 20 வியாழக்கிழமை (04.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 75

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

# பொதுமக்கள் மீதான அழுத்தங்களை நீதித்துறையினால் தடுக்க முடியாது!

## ஆசிய மனித உரிமைகள் அமைப்பு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நடைமுறையிலுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் அழுத்தங்களை நீதித்துறையினால் தடுக்க முடியாதுள்ளது. எனவே நீதித் துறையினால் மக்களின் உரிமைகளை பாதுகாக்க முடியாது. இங்கு உண்மை என்னவெனில் மக்கள் தமது உரிமைகளை இழந்து வாழ்கின்றனர் என்பதுதான் என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலின் பின்னர் அமைச்சரவைக் குறைப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் புதிய நாடாளுமன்றத்தின் அமைச்சரவையைக் குறைப்பதற்கான ஐ.ம.சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

### அரசு அறிவிப்பு


கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாட்டுக்கும் பொருளாதாரத்திற்கும் தாக்குப் பிடிக்கக் கூடிய வகையில் அமைச்சரவையை அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்துக் (16ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஜெனரல் மானவடு வெளிநாட்டில் தஞ்சம்

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவை கைது செய்த நடவடிக்கையில் தலைமை ஏற்று செயற்பட்ட மேஜர் ஜெனரல் சுமித் மானவடு தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கூறி திடீரென வெளிநாடு சென்றுள்ளார்.

சரத் பொன்சேகாவின் கைது தொடர்பில் வாக்கு மூலம் ஒன்றை பெறும் தேவையிருப்பதாக இலங்கை மனித உரிமை ஆணைக் குழு அறிவித்திருந்த (16ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர்களுக்கான தீர்வுத்திட்டத்தை தமிழ்க் கூட்டமைப்பு தயாரித்துள்ளது

### சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுயநிர்ணய அடிப்படையில் ஐ.நா.சபை நெறிமுறை ஊடாக உருவாக்கப்பட்ட மனித குழுமங்களுக்கு அதிகாரங்கள் என்ற ரீதியில் இலங்கை தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தயாரித்துள்ளதாக அதன் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரே மச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரது கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் (15ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வுத்திட்டத்திற்கு இந்தியா மீண்டும் வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கையில் அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என இந்தியா மீண்டும் ஒரு முறை வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் உள்ளிட்ட சகல இன சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைப்பது மிகவும் இன்றியமையாதது என எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இலங்கையில் புதிய ஆரம்பம் ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்த முடிவு (16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.சபையின் மனித உரிமைக் கூட்டத்தில் இலங்கை அமைச்சர் பங்கேற்கவில்லை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் நேற்று முன்தினம் ஆரம்பமான 13ஆவது கூட்டத்தில் இலங்கை அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க தேர்தல் வேலைகளில் ஈடுபட்டிருப்பதால் ஐ.நா. மனித உரிமைகள் சபை கூட்டத்தில் இலங்கையின் சார்பில் கலந்து கொள்ள சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தலைமையிலான குழுவினர் ஜெனிவா சென்றிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் (16ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவிடமிருந்து இலங்கைக்கு இராணுவதளபாடங்கள் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்துக்கு சீன அரசாங்கம் இராணுவத் தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இந்த இராணுவத்தளபாடங்களை இலங்கை அரசிடம் கையளிக்கும் உத்தியோக பூர்வ நிகழ்வு நேற்றுக் காலை பிரதமரின் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் இலங்கைக்கான சீனத் தூதுவர் யங் சூபிங் இராணுவ தளபாடங்களை சம்பிரதாய பூர்வமாக கையளித்தார்.

சீனாவின் இராணுவ தளபாட உதவிகளை வழங்கும் இந்த நிகழ்வில் வைத்து ஒரு தொகுதி கண்ணிவெடி (16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா மீதான விசாரணை நாளை!

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்றம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அல்லது திங்கட்கிழமை நிறுவப்படும் என இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான சாட்சி திரட்டும் (16ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் கற்பிட்டியில் உள்ள 14 தீவுகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பிரதேசத்திலுள்ள 14 தீவுகளை சில வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

99 வருட குத்தகை அடிப்படையில் இந்த தீவுகள் விற்பனை செய்யப்படவுள்ளதுடன் வெளிநாட்டு நிறுவனங்கள் சுற்றுலா விடுதிகளை அமைப்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விற்பனையின் பின்னணியில் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலர் இருப்பதாகவும் பெரும் தரகு வர்த்தகமும் காணப்படுவதாக தெரியவருகிறது. முக்கியமான இந்தத் தீவுகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுவது பாரிய அநீதி என சுற்றாடல் ஆர்வலர்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரம் மார்ச் 17இல் யாழில் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

எதிர்வரும் மார்ச் 17, 18, 19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளவிருப்பதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

தொடர்ந்து வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களிலும் தேர்தல் பிரசாரப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## பெறுபேறுகள் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் நடத்தப்பட்ட அகில இலங்கை சைவ நெறித் தேர்வுக்கான 2009 பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைச் செயலாளர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (ச-14)

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

அமரர்கள் வைத்தியகலாநிதி க.பரிமேலழகர், ஆசிரியர் வே.விமலன், செல்வன் செ. பரணிதரன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக தும்பளை விவேகானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆறு பேர் கொண்ட ஐந்து பந்துப் பரிமாற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டி மார்ச் 6 மற்றும் மார்ச் 7 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு மாதனை கண்ணகை அம்மன் ஆலய அருகாமை விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது. (ச-14)

## சிவில் காரியாலயம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச பொதுமக்களின் நன்மை கருதி நகரப் பகுதியில் சிவில் காரியாலயம் ஒன்று திறக்கப்படவுள்ளதாக பலாலிப் பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் அறிவித்துள்ளது. இக் காரியாலய திறப்பு விழா எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (ச-14)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி தொகை வழங்கல்

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியளிப்பில் நிகொட்-02 இற்கு ஊடாக மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

அரச உத்தியோகத்தர்கள் தவிர்ந்த 30.04.2009 ஆம் திகதி தொடக்கம் 31.10.2009 ஆம் திகதி வரை மீளக்குடியமர்ந்த தகுதியுடைய 16 ஆயிரத்து 831 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவு தொகையாக 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படவுள்ளது.

இக் குடும்பங்களுடன் யாழ்.மாவட்டத்திற்குள்ளேயே இடம்பெயர்ந்து மீண்டும் மீளக்குடியமர்ந்த வேலணை, யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவுகளையும் நெடுந்தீவு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சேர்ந்த 901 குடும்பங்களுக்கும் இத் தொகை வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவுகள் யாவும் மார்ச் மாதம் 27 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருப்பதால் இக் கொடுப்பனவுக்குத் தகுதியுடைய மீளக் குடியமர்ந்த குடும்பங்கள் இன்றுவரை விண்ணப்பத்தை சமர்ப்பிக்கத் தவறியிருப்பின் உடனடியாகக் கொடுப்பனவு தொடர்பான விண்ணப்பத்தை கிராம சேவையாளரிடம் பெற்றுப் பூர்த்தி செய்து கிராம சேவையாளரது சிபார்சுடன் தங்கள் பிரதேச செயலாளரிடம் அல்லது உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கொடுப்பனவு வழங்கவுள்ள குடும்பங்களுக்கான அனுமதிக் கடிதம் மார்ச் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து பிரதேச செயலாளர், உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகவும் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகவும் வழங்கப்படவுள்ளது.

சகல தகுதியுடைய மீளக் குடியமர்ந்த குடும்பங்கள் தவறாது தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சி பத்திர சான்றிதழுடன் எங்களால் பின்னர் அறிவிக்கப்படும் பிரதேச செயலகத்திலோ உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கோ அல்லது வேறு இடத்திற்கோ சென்று உறுதிச் சீட்டில் கையொப்பத்தையிட்டு அனுமதிக் கடிதத்தைப் பெற்று வங்கியில் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளவுள்ளோர்,

| பிரதேச செயலர் பிரிவு/ உதவி அரசாங்க அதிபர் பிரிவு | குடும்ப எண்ணிக்கை |
|---|---|
| வேலணை | 1765 |
| யாழ்ப்பாணம் | 1788 |
| நல்லூர் | 1524 |
| உடுவில் | 705 |
| சண்டிலிப்பாய் | 959 |
| சங்கானை | 1087 |
| தெல்லிப்பழை | 511 |
| கோப்பாய் | 2342 |
| கரவெட்டி | 1149 |
| பருத்தித்துறை | 2137 |
| சாவகச்சேரி | 1730 |
| நெடுந்தீவு | 246 |
| ஊர்காவற்றுறை | 644 |
| காரைநகர் | 707 |
| மருதங்கேணி | 438 |
| மொத்தம் | 17732 |

31.10.2009 ஆம் திகதிக்குப் பின் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கும் வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்க ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## இந்தியப் பேச்சாளருக்கு வரவேற்பு நிகழ்வு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு, இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள ஆன்மீகப் பேச்சாளர் சுசிசிவத்திற்குச் சிறப்பு வரவேற்புநிகழ்ச்சி கல்லூரி அதிபர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-14)


## அறிவித்தல்

### பாராளுமன்றத் தேர்தல் -2010.04.08
### தேர்தல்கள் திணைக்கள தற்காலிக அடையாள அட்டைகள்

நடைபெற்று முடிந்த தேர்தல்களின் போது விநியோகிக்கப்பட்டது போன்று எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் போதும் தேர்தலில் வாக்களிப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டைகளிலொன்றை வைத்திருக்காத தேருநர்களுக்கு தேர்தல்கள் திணைக்களத் தினால் தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் தேருநர்கள் பிரதேச செயலகங்கள்/ உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி இரண்டு 1 1/4"x 1" அளவிலான வர்ணம் அல்லது கறுப்பு வெள்ளை புகைப்படங்களுடன் கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலகங் கள்/ உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் சமர்ப்பிக்கவேண்டும்.


விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த தேருநர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகள் கிராம அலுவலர் ஊடாக தேருநர்களிடம் கையளிக்கப்படும்.

நடைபெற்று முடிந்த தேர்தல்களின் போது ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களம்/ தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு மீளப்பெறப் பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் மீண்டும் பாராளுமன்றத் தேர்தலுக்காக கிராம அலுவலரூடாக தேருநர்களிடம் கையளிக்கப்படும்.

க.கணேஷ்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
இல. 10 யாழ்ப்பாணம்.

(சி-4601)


## பேசும் படம்



நீண்ட காலமாக இவை இந்த இடத்தில்...!


கோகுல் ரவல்ஸ் Hokul Travels

திருமண வைபவங்களுக்கான குளிரூட்டப்பட்ட சொகுசு கார், வான் மற்றும் பஸ் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-
021 222 8984, 077 3747825, 077 6152992

(C-4449)


## சைவ பரிபாலன சபையின் முன்னோடித் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் வருடந்தோறும் நடத்தப்படும் க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர்களுக்கான முன்னோ டித் தேர்வில் எதிர்வரும் 16 ஆம் திகதி இந்து நாகரிகம், இந்து சமயமும் 17 ஆம் திகதி தமிழ்மொழியும் நடைபெறவுள்ளதாக சைவ பரிபாலன சபைத் தேர்வுச் செயலர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (ச-14)


## அபூர்வ மருத்துவம்

எலும்புகளை அதிகளவு செய லிழக்கச் செய்யும் வாதம், தீராத கெற்பரோகம், சிறுநீரக வியாதி களை குணமாக்கும் மருந்தியல்.

சனி, ஞாயிறு 8.00-2.00
உயரப்புலப் பிள்ளையார் கோவிலடி,
கிழக்கு ... 5.00 PM
ஆனைக்கோட்டை. (இ)



## உதவி நிர்வாக அலுவலர் தேவை

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திற்கு ஆங்கில மற்றும் கணக்கீட்டு அறிவுள்ள அரச, தனியார் நிறுவனங்களில் கடமை புரிந்து ஓய்வு பெற்ற அலுவலர் தேவை.

விண்ணப்பங்கள் 10.03.2010-ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(சி-4549)



## தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் கிளிநொச்சி

### நடத்துநர்களுடனான ஒன்றுகூடல்

அன்புடையீர்!

தனியார் பேருந்து உரிமையாளர் கழகத்தில் நடத்துநராக பணிபுரிந்தோர்களுடனான முக்கிய கலந்துரையாடல் வரும் 10.03.2010 புதன் பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி கச்சேரிக்கு முன்பாக இயங்கும் எமது பணிமனையில் நடைபெறும். மேற்படி நடத்துநர்களை இதில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
தலைவர்
த. ஜெகதீஸ்வரன்

(சி-4546)



## விற்பனைக்கு

இல. 17/2, லோட்டஸ் வீதி, ஆறுகால்மடத்தில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:
077 4972846
021 4903195

(சி-4538)

# இன்று ஒரு தகவல்

## கல்வியில் கவனம்

படிக்கிற பிள்ளைகளுக்கு படிப்பைத் தவிர வேறெங்கும் கவனம் போகக்கூடாது. அப்பொழுது தான் படிப்பு நன்றாக வரும். இல்லையென்றால் வேறு ஏதாவது தான் வரும்.

குருகுலத்திலெல்லாம் ஒவ்வொருவரும் எப்படியெல்லாம் படித்திருக்கிறார்கள் தெரியுமா?

ஜனகர் ஒரு நாட்டினுடைய ராஜா. அதுதான் ராஜாவாகிவிட்டோமே... இனிமேல் நமக்கு எதற்குப் படிப்பு? என்று அவர் நினைக்கவில்லை.

யாக்ஞவல்கியரின் குருகுலத்தில் சேர்ந்து படித்தார்.

யாக்ஞவல்கியர் தினமும் ஜனகர் வந்த பின்புதான் பாடங்களை ஆரம்பிப்பது வழக்கம்.

இது சில மாணவர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஜனகர் ஒரு மன்னன் என்பதால் இவ்வளவு மரியாதை கொடுக்கிறார் என்று நினைத்தார்கள். இவர்கள் நினைப்பதை குரு தன்னுடைய யோக சக்தியால் தெரிந்துகொண்டார்.

குரு கவலைப்பட்டார். தன்னைப்பற்றி இப்படி நினைக்கிறார்களே என்பதற்காக அல்ல... இப்படிப்பட்ட நினைப்பினால் அவர்களுடைய கல்வியின் பலனை இழந்துவிடுவார்களே என்று கவலை தான் அவருக்கு.

ஒருநாள் வகுப்பு நடந்துகொண்டிருந்தது. அவசர அவசரமாக சிலர் ஓடிவந்தார்கள்.

"ஐயா! பட்டணம் தீப்பிடித்து எரிந்துகொண்டிருக்கிறது" என்றார்கள். இதைக் கேட்டவுடன் சில மாணவர்கள் துள்ளி எழுந்தார்கள். குருவிடம் சொல்லாமல் கொள்ளாமல் வெளியே ஓடினார்கள். அங்கே கொடியில் துவைத்துக் காயப் போட்டிருந்த அவர்களுடைய துணிமணிகளை எடுத்துப் பார்த்துவிட்டு இன்னும் சிலரும் எழுந்து ஓடினார்கள்.

அடுத்ததாக இன்னும் சிலர் சத்தம் போட்டுக்கொண்டே ஓடிவந்தார்கள்.

"அரசே! அரண்மனையிலும் நெருப்பு சூழ்ந்துவிட்டது. அங்குள்ளவர்களெல்லாம் தெருவில் இறங்கி' ஓடிக் கொண்டிருந்தார்கள். சிலபேர் நெருப்பிலும் மாட்டிக்கொண்டார்கள்.

எல்லோரும் பதறினார்கள். ஆனால் ஜனகர் மட்டும் கொஞ்சம் கூட பதறாமல், சலனடையாமல் குரு சொல்லிக் கொடுக்கும் பாடத்திலேயே மூழ்கியிருந்தாராம். அந்த அளவுக்குப் பாடத்தோடு ஒன்றிப்போய் இருந்தாராம். இது ஒரு உதாரணம்.

இன்னொரு உதாரணம் சொல்கிறேன். குருகுலத்தில் ஒரு மாணவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆசிரியருடைய மனைவி அவனுக்குச் சோறு பரிமாறிக் கொண்டிருந்தார்.

சோறு, கறியெல்லாம் வைத்தார்கள். அடுத்ததாக நெய் ஊற்றுகிறேன் என்று சொல்லி ஊற்றினார்கள். சாப்பிட ஆரம்பித்த மாணவனின் முகம் ஒரு மாதிரியாகி விட்டது.

"என்னங்க இது... நெய் ஊற்றுகிறேன் என்று சொல்லிவிட்டு வேப்பெண்ணெயை ஊற்றுகிறீர்களே... ஏதாவது ஞாபகமறதியா?" என்று கேட்டான்.

அதற்கு ஆசிரியர் விபரம் சொன்னார். "அப்படி இல்லையப்பா! நீ என்றைக்கு வந்து சேர்ந்தாயோ அன்றிலிருந்து உனக்கு வேப்பெண்ணெய் தான் ஊற்றிக்கொண்டு வருகிறோம். உன்னுடைய கவனம் முழுவதும் படிப்பில் இருந்ததனால் உன்னுடைய நாக்கு ருசி தேடவில்லை. ஆனால் இன்றைக்கு உன்னுடைய கவனம் மாறி விட்டது.

அதனால் தான் இது வேப்பெண்ணெய் என்ற ஞாபகம் உனக்கு வந்துவிட்டது.

"உன்னுடைய நாக்கு ருசி தேட ஆரம்பித்துவிட்டது. இனிமேல் நீ இந்த குருகுலத்தில் இருக்க வேண்டாம். இதை விட்டுட்டுப் போய் விடுவது தான் நல்லது" என்றாராம்.

கல்வி என்றால் அதில் எவ்வளவு கவனமாக இருக்கவேண்டும் என்பதற்கு இதெல்லாம் உதாரணங்கள். நீங்கள் உடனே "என்ன சேர் இது. நெருப்பு பிடித்துக்கொண்டது என்றால் கூட அதைக் கவனிக்காமல் விட்டுவிட வேண்டுமா?

வேப்பெண்ணெயை நெய்யென்று ஊற்றினால் கூட சாப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டுமா? என்றெல்லாம் கேட்கக் கூடாது.

கல்வியில் எந்த அளவுக்கு கவனம் இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்வதற்கு இதெல்லாம் உதாரணம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வளவு தான்.

இந்தக் காலத்துப் பையன் ஒருத்தனிடம் பேசிக் கொண்டிருந்தேன். இந்தக் கதைகளையெல்லாம் அவனிடம் சொல்லிவிட்டு கேட்டேன்.

நீ வீட்டில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கும் போது ஒருத்தர் ஓடிவந்து உங்களுடைய பள்ளிக்கூடம் தீப்பிடித்து விட்டதாக சொன்னால் நீ உடனே என்ன செய்வாய்? என்று கேட்டேன்.

"நானும் ஜனகர் மாதிரித்தான் சேர் படித்துக் கொண்டு தான் இருப்பேன். எழுந்து ஓடிப்போய் தீயை அணைக்க முயற்சி செய்ய மாட்டேன்." என்றான்.

"ஏன்டா அப்படி?" என்றேன்.

"பள்ளிக் கூடம் எரிந்தால் தானே சேர் எங்களுக்கெல்லாம் லீவு கிடைக்கும் என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ்த் தினப் போட்டியை பிற்போடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சினால் இம்மாதம் 13 ஆம்திகதி தமிழ்த் தினப் போட்டி நடத்தப்படவுள்ள நிலையில் அத்திகதியை பிற்போடுமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இம்மாதம் 13 ஆம்திகதி இந்துக்களால் மகாசிவராத்திரி அனுஷ்டிக்கப்படவுள்ளதால் அத்தினத்தில் தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்றுவது இந்து சமய மாணவர்களுக்கு அசௌகரியமாக இருக்குமென்பதால் இதனை பிற்போடுமாறு அகில இலங்கை இந்துமாமன்ற செயலாளர் கல்வியமைச்சருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். ஓ

# கருவாடு தயாரிப்பதற்கான சூரிய உலர்த்தி உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து யாழ். பிரதேச செயலகர் பிரிவில் மீள்குடியேறியவர்களுக்கு கருவாடு தயாரிக்கும் சூரிய உலர்த்தி உபகரணம் வழங்கும் வைபவம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ் பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இடம்பெயர்ந்து வந்தவர்களில் 200 குடும்பங்களுக்கு சிக்கன அடுப்பும் 30 பேருக்கு வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான உதவிகளும் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை விலைபெறுதகு அதிகார சபையின் தலைவர் டாக்டர் கிருஸ்ாந் டெகரகொட மற்றும் அதிகாரிகள் யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் ஆகியோரும் பங்கு பற்றவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-30)

## மோட்டார் வாகன வரி செலுத்தியோருக்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தின் மோட்டார் வாகன பிரிவில் மோட்டார் சைக்கிள், கார் என்பனவற்றிற்கு வரி செலுத்தும் போது சூழல் பாதுகாப்பு வரியினையும் சேர்த்து செலுத்திய உடமையாளர்கள் நாளை வெள்ளிக்கிழமை வரி அனுமதிப்பத்திரம் பற்றுச்சீட்டு என்பனவற்றுடன் பிரதேச செயலக கணக்கு கிளையுடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-30)

## துவிச்சக்கர வண்டிகள் கையளிப்பு

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து யாழ்.பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேறிய மாணவர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களினால் யாழ். பிரதேச செயலகத்தில் வைத்து 121 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

மேலும் மிகுதியாகவுள்ள 41 பேருக்கும் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்தவர்களுக்கும் உரிய துவிச்சக்கர வண்டிகள் நிறுவனங்களின் உதவியுடன்மிகவிரைவில் வழங்கப்படவுள்ளதாக யாழ். பிரதேச செயலகத்தினர் தெரிவித் துள்ளனர். (ஓ-30)

## வடமராட்சி வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயமட்ட மெய்வல்லுநர்போட்டி எதிர்வரும் 15, 16, 17 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை பெருவிளையாட்டுப் போட்டிகள் ஏப்ரல் மாத விடுமுறை காலத்திற்குள் நடைபெறும் எனவும் இதற்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கான நெஸ்லே மரதனோட்டப்போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ஓ-19)

## சங்கடகர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வட கிழக்கு கலட்டி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாசி மாத சங்கடகர சதுர்த்தி உற்சவம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக ஆலய பிரதம குருக்கள் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# யாழில் கைத்தொழிற்சாலை மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய கள ஆய்வு

(யாழ்ப்பாணம்)

சுற்றாடல் அமைச்சின் பணிப்புரைக்கமைய யாழ். மாவட்டத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் கைத்தொழிற்சாலை மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய கள ஆய்வுகளை தாம் மேற்கொண்டு வருவதாக சபையின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் புவியியல் சார் அமைவிடத்தின் (GPS) தரவுகள் சேகரிக்கப்பட்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் இவ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதன்மூலம் பெறப்படும் புவியியல் தகவல் முறைமை (GIS) க்குள் உட்படுத்தப்பட்டு வருவதாகவும் மேலும் இதனால் சுற்றாடல் முகாமைத்துவத் திட்டம் கண்காணிப்பு அனர்த்த முகாமைத்துவம் போன்றவற்றினை வகுத்து செயற்படுவதன் மூலம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவியாக அமையும் என்றார். (ஓ-30)

# இராசி பலன்

04.03.2010
(மாசி 20, வியாழக்கிழமை)
சதுர்த்தி பிற்பகல் 3.43 மணிவரை
சித்திரை பிற்பகல் 1.49 மணிவரை
இராகுகாலம் 1.56-3.26 மணிவரை
சுபநேரம் 7.56-9.26 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்
சித்தாமிர்தம்.

| | |
|---|---|
| மேடம் | அபூர்வ சந்திப்பு, தனதானிய சேர்க்கை, தேகநலன், முயற்சி கைகூடும். |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர்கள் வருகை, சுவாரஸ்யம், உடல்நலம். |
| மிதுனம் | அஜீரணரோகம், காரிய இடையூறு, குடும்பக்கவலை, தனவிரயம். |
| கடகம் | மாதா சுகம், கல்வியில் ஆர்வம், சுபசெலவு, பெரியோர் மனஸ்தாபம். |
| சிங்கம் | அந்நியர் சந்திப்பு, பிரயாண நன்மை, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| கன்னி | செய்தொழில் விருத்தி, மனஸ்தாபம், போசனசுகக் குறைவு, தனவிரயம். |
| துலாம் | மாதர் நட்பு, சிந்தனை மிகுதி, வெகுமானம், போசனசுகம். |
| விருச்சிகம் | சோம்பல் நிலை, புத்திரரால் கவலை, சுபசெலவு, பிறருக்கு உதவுதல். |
| தனுசு | இனிய சம்பவம், தனதானிய சேர்க்கை, உறவினர் வருகை, கீர்த்தி. |
| மகரம் | நல்ல வரவேற்பு, இஷ்ட சித்தி, அதிகாரம், போசன நன்மை. |
| கும்பம் | தேவையற்ற பயம், பிரயாண நன்மை, வேலைச்சுமை, பணவிரயம். |
| மீனம் | எதிர்பாராத பகை, வாகன பயம், காரியதாமதம், ஆரோக்கியக் குறைவு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 110 | 120 |
| தக்காளி | 50 | 60 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 60 |
| கரட் | 80 | 90 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 70 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 50 |
| பாகற்காய் | 80 | 90 | 130 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 70 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 35 |
| பயிற்றங்காய் | 110 | 120 | 140 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 40 |
| முருங்கைக்காய் | 500 | 530 | 500 |
| போஞ்சி | 80 | 90 | 120 |
| கத்தரி தம்புள்ள | 70 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 80 | 90 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 | 35 |






உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதிப்பொதுமுகாமையாளர் இ.முத்துரட்ணானந்தன் மங்கல விளக்கேற்றுவதையும், கல்லூரி அதிபர் திருமதி குட்டித்தம்பி உரையாற்றுவதையும், வெற்றிபெற்ற மாணவருக்கு பிரதமவிருந்தினர் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் செ.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலை அதிபரும் சங்கானை கல்விக்கோட்ட அதிபருமான மு. ஜெயக்குமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக பணிப்புலம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் த.றஞ்சன் கலந்து கொள்ளவுள்ளனர். (2-3)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(அல்வாய்)

வல்வெட்டித்துறை றோமன கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெடியகாடு பிள்ளையார் ஆலய சுற்றாடலில் பாடசாலை அதிபர் நா. கண்ணதாஸன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வல்வெட்டித்துறை கிளை முகாமையாளர் சி.சிறிகாந்தன் கலந்து சிறப்பிப்பதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி லலிதாதேவி சிறிகாந்தன் வழங்கவுள்ளார். (ஓ-4-19)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

வைத்தீஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் தி.சோமசேகரம் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-4)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இலவச கண்புரை (cataract) பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

மனிதநேயம் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இன்று வியாழக்கிழமை மதியம் 2.00 மணியிலிருந்து வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள கண் புரையால் பார்வை பாதிக்கப்பட்டவர்களை கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் தலைமையில் பரிசோதனை நடத்தி சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டியவர்களை இனங்கண்டு சத்திர சிகிச்சை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்பிரகாரம் இனங்கண்டவர்கள் அவர்களின் பொருளாதார வசதிக்கேற்ப சத்திர சிகிச்சை செலவுகள் முழுமையாகவோ, பகுதியாகவோ மனிதநேயம், நம்பிக்கை நிதியம் பொறுப்பேற்றுக் கொள்ளும் என்பதை கவனத்தில் கொண்டு இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ)

## துவிச்சக்கரவண்டி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகர் பிரிவில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து மீள்குடியேறிய மாணவர்களுக்கு போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும்நிகழ்வு இன்று வியாழக் கிழமை முற்பகல் 9 மணிக்கு சட்டநாதர் வீதியில் உள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கு வழங்கப் படவுள்ள 200 துவிச்சக்கரவண்டிகளை நல்லூர் பிரதேச செயலர் வழங்கவுள்ளார். (ஓ-30)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி இரண்டாம் வருடப்பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் இரண்டாம் வருட மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வழங்கப்பட்ட சகல ஒப்படைகளையும் அன்றைய தினம் சமர்ப்பிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை கேட்டுள்ளார். (2-3)

## சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் நீதிநூல் மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை -சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடம்தோறும் நடத்திவரும் நீதிநூல் மனனப் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் -1, தரம்-2 மாணவர்களுக்கு நடைபெறும் இப்பரீட்சைக்கு, பல்வேறு பாடசாலைகளைச்சேர்ந்த சுமார் 550 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சார்த்திகள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலமும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று "சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம்" இல .82, நாவலர்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு சைவ சமய அபிவிருத்திக்கழக செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ)

## தரவு இற்றைப்படுத்தலும் மாதாந்த மீளாய்வுக்கூட்டமும்

(அல்வாய்)

வடமராட்சி வலய தரவு இற்றைப்படுத்தலும் மாதாந்த மீளாய்வுகூட்டமும் இன்றும் நாளையும் காலை 8.30மணிமுதல் 3.30 மணிவரை புலோலி மெ.மி.த.க. பாட சாலையில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று வியாழக்கிழமை பருத்தித்துறை கோட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் மருதங்கேணி கோட்டத்திலுள்ள அம்பன் அ.மி.த.க. பாடசாலை, குடத்தனை அ.மி.த.க.பாடசாலை, குடத்தனை றோ.க.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளிலுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

நாளை வெள்ளிக்கிழமை கரவெட்டி கோட்ட சகல பாடசாலைகளும் குடத்தனை அ.த.க.பாடசாலை, மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, நாகர்கோயில் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை அதிபர்களையும், பொறுப்பாசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## கோட்டமட்ட தெரிவுப் போட்டிகள்

(அல்வாய்)

பருத்தித்துறை கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கான தெரிவுப்போட்டிகள் எதிர்வரும் 9,10 ஆம் மற்றும் 11ஆம்திகளில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் வல்வெட்டித்துறை பகுதிக்கு சிதம்பராக் கல்லூரி மைதானத்திலும் புலோலி பருத்தித்துறை பகுதிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானம் மற்றும் மெதடிஸ்த உயர்தரப் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.(ஓ-4-19)




## அல்லைப்பிட்டியூடான போக்குவரத்து சேவையை மீள ஆரம்பிக்க கோரிக்கை

நாட்டில் போர் ஓய்ந்து அமைதி ஏற்பட்டதன் பின்பு மீளவும் தமது சொந்த இடங்களில் அதிகமான மக்கள் மீள்குடியேறி வருகின்றனர்.

தீவகம் அல்லைப்பிட்டி பகுதிகளிலும் மக்கள் மீள்குடியேறியதுடன் தமதுசிதைந்த குடியிருப்புக்களை திருத்துவதுடன் வீடுகள் அற்றவர்களுக்கு பன்னாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்ற தற்காலிக வீடுகளிலும் வசிக்க தொடங்கியுள்ளனர்.

ஆனால் இப்பகுதியில் கூடுமான மக்கள் குடியேறிய் பின்பும் அரச பொது போக்குவரத்து பேருந்து சேவையோ அல்லது தனியார் போக்குவரத்து பேருந்து சேவையோ இன்னும் அல்லைப்பிட்டியூடான போக்கு வரத்து வழி தடம் ஆரம்பிக்கப்படவில்லை.

இப்பகுதியினூடாக 1990 ஆம் ஆண்டுக்கு முன்பு சுமார் 4 சேவைகளை அரச பொது போக்குவரத்து சேவை நடத்தியது. ஆனால் இதை மீளவும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் வேண்டியும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையென்றும் இதனால் தாம் பலத்த சிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்நோக்குவதாகவும் தமது பயணத்தை தொடர்வதற்கு தமது குடியிருப்புகளிலிருந்து 2 கி.மீ தூரத்துக்கும் அதிகமான தூரம் நடந்து பிரதான வீதியில் நடைபெறும் போக்குவரத்து பேருந்துகளிலேயே பயணிப்பதாகவும் இதனால் மாணவர்கள் அரச மற்றும் தனியார் ஊழியர்கள் உட்படப் பொதுமக்கள் அனைவரும் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் எனவே அல்லைப்பிட்டி மண்கும்பான் ஊடான போக்குவரத்து சேவையை மீள ஆரம்பிக்குமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (ஓ-22)

## வெள்ளைக்கடற்கரை பகுதியில் முஸ்லிம்கள் மீளக்குடியேற்றம்

(வேலணை)

வேலணை வெள்ளைக் கடற்கரையின் பள்ளிவாசலையண்டிய பகுதியில் தற்போது முஸ்லிம் சமூகத்தினர் மீளக்குடியேறத் தொடங்கியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு இப்பகுதியிலிருந்து வெளியேறியோரில் அநேகமானோர் புத்தளம் பகுதியில் வசித்துவந்தனர்.

தற்போதைய அமைதிச் சூழல் ஏற்பட்டதன் பின்பு மீளவும் இவர்கள் குடியேற ஆரம்பித்துள்ளனர்.

கடந்த இருபது வருடங்களின் பின்பு இவர்கள் மீளவும் கடற்றொழிலை வேலணை வெள்ளைக்கடற்கரையில் ஆரம்பித்துள்ளதாகவும் சுமார் 10 பேர் தற்போது கடற்றொழிலில் ஈடுபடுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

முன்னைய காலங்களில் இவர்களுக்கு என்று ஓர் மீனவர் சங்கம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பகுதியில் கடற்றொழில் செய்யும் முஸ்லிம் சமூகத்தினர் தமக்கு எந்த விதமான அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லையென்றும் தமது நிலையை கவனத்திலெடுத்து அரச அதிகாரிகளோ அல்லது பொது அமைப்புக்களோ உதவி செய்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-22)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும்

25


## மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்

### மட்டக்களப்பு தேசம்

இலங்கைத் தமிழர் பூர்வீக காலம் முதலாகச் செறிந்து வாழும் பிரதானமான நிலப்பகுதிகளில் மட்டக்களப்பும் ஒன்றாகும். 'மத்திய காலத்தில் மட்டக்களப்பு



தேசம் என்ற சொல் வழக்கு உருவாகியிருந்தது. அது வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் வரையறையான எல்லைகளைக் கொண்ட நிலப்பகுதியாக அமைந்திருந்தது. வடக்கில் வெருகலாறும் தெற்கிலே குமணையும் அதன் எல்லைகளாக இமைந்துள்ளன. மேற்கிலே அடர்த்தியான காடு படர்ந்திருந்தது. எல்லையிலுள்ள காடுகளில் முற்காலத்தில் வேடரின் நடமாட்டம் கணிசமான அளவிலே காணப்பட்டது. வேடருக்கும் மட்டக்களப்பிலுள்ள தமிழருக்குஞ் சில தொடர்புகள் ஏற்பட்டன. வனம் ஒரு வரையறையான எல்லையாக அமையவில்லை. எல்லைப்புறங்களிற் காடுகளை






வெட்டிச் சேனைப் பயிர்களைச் செய்கை பண்ண முடிந்தது. சில பெறுமதியான இயற்கை வளங்களையும் காட்டுப் புறங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடிந்தது.

மட்டக்களப்பு தேசத்தின் பிரதான அம்சம் அதன் நடுவண் அமைந்துள்ளதும் 50 மைல் நீளங் கொண்டதுமான வாவியாகும். அதன் காரணமாகவே மட்டக்களப்பு என்னும் பெயர் உண்டானதென்று கொள்ளப்படும். நாட்டின் வனப்பிற்கும் வளத்திற்கும் வாவி ஏதுவாயுள்ளது. இயற்கையின் காரணமாக மட்டக்களப்பில் எழுவர்ன்கரை, படுவான்கரை என்னும் இரு பெரும் பிரிவுகள் அமைந்துவிட்டன. எழுவான் கரைப்பகுதி நெய்தல் நிலப்பாங்குடையுது. அது வெண்மணல் செறிந்த சமதரை, குடிசனப் பெருக்கமும் பட்டினப் பாக்கங்களும் அங்கு கரையோரம் முழுதும் பரந்து காணப்படுகின்றன. பழங்காலம் முதலாக வாணிப நிலையங்களும் வணிக சமூகத்தவரின் குடியிருப்புகளும் அப்பகுதியில் விருத்தி பெற்று வந்துள்ளன. மீனவர் குடியிருப்புகளும் ஆங்காங்கே அமைந்துள்ளன.

வாவியின் மேற்கிலமைந்த பகுதி படுவான்கரை எனப்படும். அதில் மருதம், முல்லை என்ற இரு வகைக்குரிய நிலங்கள் உண்டு. அங்கு மிகப் பரந்த வயல் வெளிகள் காணப்படும். அங்குள்ள நிலபோக முறையும் பயி ர்ச்செய்கை முறைகளும் தனித்துவ மானவை. அங்கே மானாவாரி, நன்செய் என்ற இரு வகையான நிலங்களும் உள்ளன. அதிகமான நெல் அங்கு விளைந்தமையால் முற்காலங்களில் வியாபாரிகள் திருகோணமலை, யாழ்ப்பாணம், மாத்தறை முதலான இடங்களுக்கு அதனை ஏற்றிச் சென்றனர்.

மட்டக்களப்பு தேசம் என்ற உணர்வு உணர்ச்சி பூர்வமானது. அது பிராந்தியத்திற்கும் அங்கு வாழ்ந்த மக்களுக்கும் இடையிலான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட வொன்றாகும். மட்டக்களப்பு முழுவதும் முற்காலங்களில் ஒரு தனியான நிர்வாகப் பிரிவாகவோ ஆட்சிப் புலமாகவோ அமைந்திருக்கவில்லை. அதிற் கோரளைப்பற்று, வாகரை, மட்டக்களப்பு, மண்முனை, எருவில், போரதீவு, பழுகாமம், நாடுகாடு, சம்மாந்துறை, பானமை என்னும் பிரிவுகள் இருந்தன.

அவற்றிலே வன்னி யர் என்னும் சிற்றரசரின் ஆட்சி ஏற்பட்டிருந்தது. அவர்களின் ஆட்சி பரம்பரை வழியானது. பொலநறுவை, கோட்டை, கண்டி போன்ற இராசதானிகள் பல முற்றிரு ந்த காலங்களில் வன்னியர் அவற்றின் மேலாதிக்கத்தை ஒப்புக் கொண்டு அங்குள்ள அரசருக்குத் திறை செலுத்தினார்கள். ஏனைய காலப் பகுதிகளில் அவர்கள் சுதந்திரமாக ஆட்சி புரிந்தனர்.



பிராந்தியமானது அரசியலின் அடிப்படையிலே பல பிரிவுகளாக பிரிந்திருந்த பொழுதிலும் அவை அனைத்தும் ஒரு பொதுவான தேசத்தில் அம்சங்களானவை என்ற உணர்வு வலுப் பெற்றிருந்தது. பொருளாதார அமைப்பு, மொழிவழக்கு, தேச—சமூக வழமைகள், சமய வழிபாடுகள், சடங்குமுறைகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் மட்டக்களப்புப் பிராந்தியம் முழுவதிலும் வாழ்ந்த தமிழரிடையே பொதுவான அம்சங்கள் காணப்பட்டன. சொத்துரிமைகளைப் பொறுத்தவரையில் மருமக்கள் தாயமுறையும் சமுதாயவமைப்பிற் குடி என்பதை மூலமாகக் கொண்ட உறவு முறையும் மட்டக்களப்பு தேசத்தவர் எல்லோருக்கும் பொதுவானவை. அங்குள்ள முஸ்லிம் சமூகத்தவரிடையிலும் இந்த வழமைகள் இடம் பெற்றுள்ளமை கவனித்தற்குரிய ஒன்றாகும்.

மட்டக்களப்பிலே தேசத்துக் கோயில்கள் என்னுங் கோட்பாடு காணப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் அதனைப் போன்ற கோட்பாடு எதுவும் இருக்கவில்லை. மச்சகேஸ்வரம் என்னும் கோணேஸ்வரம் முதலாகக் கதிர்காமம் வரையிலான ஏழு கோயில்களைத் தேசத்துக்கோயில்களாகக் கொண்டனர். ஏனைய ஐந்து கோயில்களும் மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ளனவாகும். முற்காலங்களிலே மட்டக்களப்பு தேசத் தவர்களாற் தலைசிறந்தனவாகக் கொள் ளப்பட்டவை தேசத்துக் கோயில்களாகும். சேத்திலுள்ள சைவர்கள் எல்லோரும் அத்தலங்களுக்கு யாத்திரை போவது வழக்கம். விழாக்காலங்களில் ஆலயங்களில் நடைபெற்ற வைபவங் களும் அவற்றில் அனுசரிக்கப்பட்ட சம்பிர தாயங்களும் சமுதாயக் கட்டுக்கோப்புக் களும் பந்தங்களுக்கும் அழுத்தங் கொடுக்கும் வகையில் அமைந்திருந்தன.

தலயாத்திரைகளும் ஆலய வழமைகளும் மட்டக்களப்பு பிராந் தியம் முழுவதிலும் வாழ்ந்த மக்களிடையே சமய வழிபாடுகள், சம்பிரதாயங்கள், இலக்கிய மரபுகள், சடங்குகள் முதலான வற்றிலே ஒரு பொதுவான பாரம்பரியம் ஏற்படுவதற்கு ஏதுவாயிருந்தன. அதன் விளைவாகவே மத்திய காலத்தில் மட்டக் களப்பு தேசம் என்ற சிந்தனை உருவாகியது. கண்டி மன்னனோடு செய்துகொண்ட உடன்படிக்கை மூலம் ஒல்லாந்தர் கி.பி 1766இல் மட்டக்களப்பு தேசத்தில் அடங்கிய பிரிவுகள் எல்லாவற்றின் மீதும் ஆட்சி யதிகாரம் பெற்றனர். ஒல்லாந்தர் மட்டக் களப்பு தேசம் முழுவதையும் தனியொரு நிர்வாகப் பிரிவாக அமைத்திருந்தனர். அந்த நிலை கி.பி 1962 ஆம் ஆண்டு வரை நிலைபெற்றது.

பேராசிரியர்
சி.பத்மநாதன்

அந்த வருடத்திலே இலங் கை அரசாங்கம், அந்த மாவட்டத்தை இருகூறுகளாக்கி அம்பாறை என்ற புதிய வொரு நிர்வாகப் பிரிவினை உருவாக்கி விட்டது. அது இந் நாட்களில் திகாமடுல்ல என்றும் சொல்லப்படுகிறது. இந்தப் புதிய ஏற்பாடுகளின் பயனாக புராதனமான மட்டக்களப்பு தேசம் சீர்குலைத்துவிட்டது. (தொடரும்)

## மன்னாரில் தமிழ் மக்களின் நிலங்களில் சிங்கள குடியேற்றங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

தற்போது மன்னார்ப் பகுதியில் இலங்கைக் கடற்படையினரை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய மன்னார் முள்ளிக்குளம் பகுதியை உள்ளடக்கியதாக தமிழர்களுக்கு சொத்தான ஆயிரம் ஏக்கர் காணியில் கடற்படையினரின் ஆயிரம் குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கைக்கென பாரஊர்திகளில் பெருமளவான பொருட்கள் அப்பகுதிகளுக்குக் கொண்டு சென்று குவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பகுதியில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் தமது அடுத்தகட்ட நகர்வு தொடர்பில் கடும் குழப்பமும், வேதனையும் அடைந்துள்ளதாக மன்னாரின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து பெயர்ப்பலகைகளிலும் சிங்கள மொழி முதன்மையாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டம் போர் மூலம் மீட்கப்பட்டதாகவும், அதனால் அது சிங்களவர்களுக்கே சொந்தம் எனத் தெரிவிக்கின்ற படையினர் பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள், விற்பனை நிலையங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற விளம்பரப் பலகைகள் மற்றும் பெயர்ப்பலகைகள் அனைத்திலும் பிரதானமான சிங்களமொழியிலேயே எழுதப்படல் வேண்டும் என மாவட்டம் முழுமையிலும் அறிவித்து வருகின்றனர்.

அவ்வாறு மாற்றம் செய்யாதவர்கள் கடும் அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் இதற்கமைய அச்சம் காரணமாக மக்கள் உட்பட்ட அனைவரும் தத்தமது பெயர்ப் பலகைகள் மாற்றங்களை மேற்கொண்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (2-6)

## அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க தேர்தல் வரை காத்திருக்க தேவையில்லை

### ரணில்விக்கிரமசிங்க



(கொழும்பு)

அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குத் தேர்தல் முடியும் வரை காத்திருக்கத் தேவையில்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தில் தற்போது 106 அமைச்சர்கள் இருப்பதாகவும் இவர்களில் 50பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களெனவும் எஞ்சியோர் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாகவும் பிரதிநிதி அமைச்சர்களாகவும் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த 106 பேரும் பொதுமக்களுக்குப் பெரும் சுமையாக உள்ளதாகவும் ஒருவருக்கு 5 வாகனங்கள் வீதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்ற அனுமதியின்றித் தமது சம்பளத்தை ஒரு இலட்சம் ரூபாவால் அதிகரித்துக் கொண்டுள்ளதாகவும் அவர் சொன்னார். இவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஏன் தேர்தல் முடியும்வரை காத்திருக்கவேண்டுமென அவர் கேட்டார். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச செய்தது போலத் தற்போது கூட அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியுமென அவர் மேலும் கூறினார். (2-6)

# ஆன்மீகத்தை கடைப்பிடித்தால் — அரசியல் புனிதமாகும் —



(பெங்களூர்)

அரசியலில் ஆன்மீகத்தைக் கடைப்பிடித்தால் தான் அரசியல்புனிதமாகும் என்று வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

மத்திய தீர்வை நாள் கடந்த புதன்கிழமை பெங்களூரில் கடைப்பிடிக்கப்பட்டது. வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் ரவிசங்கர்ஜி விழாவில் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது,

மக்கள் அரசுக்கு வரி செலுத்துவதை ஒரு சமுதாய கடமையாக கொள்ள வேண்டும் . வரி செலுத்துவதை ஒரு கடமையாக கொண்டு பொறுப்புடனும் ஒளிவு மறைவு இல்லாமலும் நேர்மையான முறையில் செலுத்தவேண்டும்.

அரசியலில் ஆன்மீகத்தை புகுத்த வேண்டும். அதை விரைவில் செய்து முடிக்க வேண்டும். வாணிபத்தை சமுதாய பொதுவுடைமையாக்க வேண்டும். மத சார்பற்ற கொள்கையை அனைவரும் கடைபிடிக்க வேண்டும். அதன் மூலம் தான் உலகில் சகோதரத்துவம் ஏற்பட்டு இலஞ்ச ஊழலை எதிர்த்து போராட முடியும். இவ்வாறு ரவிசங்கர்ஜி உரையாற்றினார். (2-6)

# சிவன் உருவத்தில் பேனை சுவிஸ் நிறுவனம் தயாரிப்பு

(புதுடில்லி)

சுவிஸ் நிறுவனமான "காரன் டி ஏக்" என்ற கம்பெனி, இந்து கடவுளான சிவ பெருமானை மையமாகவைத்து, ஆடம்பரமான பேனை ஒன்றை இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது.

சுவிட்சர்லாந்து நாட்டைச்சேர்ந்த பேனை தயாரிப்பு நிறுவனம், "காரன் டி ஏக்!" இந்த நிறுவனம், இந்தியாவை சேர்ந்த "வில்லியம் பென்" என்ற நிறுவனத்துடன் இணைந்து, சிவபெருமான் வடிவத்தில் ஒருபேனையை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்தப் பேனையின் விலை இந்திய மதிப்பில் ஐந்து இலட்சம் ரூபாய். இவ்வகையில், 108 பேனைகள் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 10 பேனைகள் மட்டுமே விற்பனையாகாமல் உள்ளன. ஒவ்வொரு பேனையும் 800 வெள்ளி துண்டுகளால் உருவாக்கப்பட்டுள்ளது. சிவபெருமானின் மேனி நிறத்தை குறிக்கும் வகையில், இந்தப் பேனையின் மூடி மாணிக்கல்லால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேனையின் உடல்பகுதி மற்றும் மூடி ஆகியவை, சிவபெருமானின் பல்வேறு வகையான அழிக்கும் மற்றும் ஆக்கும் சக்திகளை குறிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சிவபெருமானின் மூன்றாவது கண்ணான நெற்றிக்கண், பேனை நிப்பின் அருகில் செதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பேனையின் நிப் விலையுயர்ந்த உலோகமான ரேடியத்தால் உருவாக்கப்பட்டு அதன் மீது 18 கரட் தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. பேனாவின் உடல் பாகத்தில், சிவபெருமானின் நடராஜர் உருவம், நான்கு கைகள் மற்றும் உடுக்கையுடன் காட்சியளிக்கிறது. (2-6)

# தி.மு.க.வின் ஆட்சியில் தமிழகம் உரிமையை இழந்து வருகிறது

## சுப்ரமணியசுவாமி பேட்டி



(மதுரை)

தி.மு.க. ஆட்சியில் பெரியாறு அணை உட்பட அனைத்து விவகாரங்களிலும் தமிழகம் உரிமையை இழந்து வருகிறது என ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியசுவாமி குற்றம் சுமத்தியுள்ளார்.


மதுரையில் அவர் கூறியதாவது, மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்கு குறிப்பிடத்தக்க திட்டங்கள் இல்லை. பெரியாறு அணை பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலை நாட்ட தி.மு.க. அரசு தவறிவிட்டது உயர் நீதி மன்ற உத்தரவின் படி 142 அடி வரை நீர் மட்டத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க மறுத்த கேரளா அரசுக்கு எதிராக தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் 132 அடி நீர் மட்டம் இருந்தாலும் தமிழகத்திற்கு தாராளமாக தண்ணீர் தரப்படுவதாக கேரளா அரசு மனுசெய்திருந்தது. இதை எதிர்த்து தமிழக அரசு பதில் கொடுக்கவில்லை.

தமிழக அரசு இப்பிரச்சினையில் காலம் கடத்தியது . தற்போது உயர் நீதிமன்றம் அமைத்த ஐந்து பேர் குழுவில் தமிழக பிரதிநிதிகள் இடம் பெறுவதில்லை என்ற தமிழக அரசின் முடிவு தவறு. பட்ஜெட்டில் சேது சமுத்திரத் திட்டத்திற்கு ஒரு காசு கூட ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதிலிருந்து இத்திட்டம் கைவிடப்பட்டது தெரிகிறது. சிதம்பரம் தீட்சிதர்கள் விவகாரத்தில் சென்னை மேல் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு தடைகோரிய மனு எதிர்வரும் 11 ஆம் திகதி உயர்நீதிமன்றில் விசாரனைக்கு வருகின்றது. அதில் கோயிலில் நடக்கும் விதிமுறை மீறல்கள் குறித்து சுட்டி காட்டவுள்ளேன்.

கோயில்கள் நிர்வாகத்திலிருந்து அரசு வெளியேற வேண்டும் எனவும் வலியுறுத்துவேன். பெரியாறு அணை குறித்து உயர் நீதி மன்ற விசாரணையிலும் பங்கேற்பேன். மேலும் அடுத்தாண்டு தமிழகத்தில் நடக்கும் சட்டசபை தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது என்றார். (2-6)

# இந்தியா - பாகிஸ்தான் பேச்சுவார்த்தை அமெரிக்க நச்சரிப்பால் நடந்திருக்கிறது

## அத்வானி புதிய விளக்கம்



(புதுடில்லி)

இந்தியா-பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை, அமெரிக்காவின் ஒருவகை நச்சரிப்பால் நடந்திருக்கிறது என்று அத்வானி மத்திய அரசை குற்றம்சாட்டியுள்ளார்.

சமீபத்தில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடந்தது.

இதுகுறித்து அத்வான் கூறியிருப்பதாவது, மத்திய அரசு சார்பில் வெளியுறவுச் செயலர் இந்த பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமானது என்றாலும், பாகிஸ்தான் வெளியுறவுச்செயலர் பாகிஸ்தான் தரப்பில், வெளிப்பூச்சாக நடந்த பேச்சு, எங்களுக்கு யாரும் யோசனை கூறத் தேவையில்லை என்றிருக்கிருக்கிறார். கடைசியில், இருவரும் தொடர்ந்து தொடர்பில் இருப்போம் என்ற அளவில் தான் பேச்சுவார்த்தை முடிந்திருக்கிறது.

இதில் மத்திய அரசு பல்டி அடித்ததிலிருந்து அமெரிக்காவின் நச்சரிப்பில் பேச்சு நடந்திருக்கிறது என்பது தெரியவருகிறது. ஆனால், முன்பு பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புடன் ஆந்திராவில் நடந்த பேச்சுவார்த்தையின் போது, இந்தியா-பாகிஸ்தான் எல்லைகளில் பயங்கரவாதம் ஒடுக்கப்பட வேண்டும் என்பதில் அப்போதைய பிரதமர் வாஜ்பாய் உறுதியாக இருந்தார். இதனால் கோபம் அடைந்த முஷாரப், தான் வெறுங்கையுடன் நாடு திரும்புவதாகக் கூறினார்.

தொடர்ந்து 2004இல் ஜனவரி மாதம் சார்க் மாநாடு முடிந்தபின் , இஸ்லாமாபாத்தில் நடந்த பேச்சுவார்த்தையின் போது, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள இந்திய எல்லைப்பகுதிகளில் பயங்கரவாதச் செயல்கள் நிகழாமல் தடுக்க உறுதியளிப்பதாக முஷாரப், வாஜ்பாயிடம் உறுதியளித்துள்ளார். இவ்வாறு அத்வானி குறிப்பிட்டுள்ளார். (2-6)

# நித்தியானந்தரை கைதுசெய்து மரணதண்டனை தர வேண்டும்

## இந்து அமைப்புக்கள் ஆவேசம்



பிரபல சாமியார் நித்தியானந்தர் தமிழ் நடிகை ரஞ்சிதாவுடன் உல்லாசமாக இருக்கும் வீடியோக்காட்சி வெளியாகியுள்ளது. இதனால் உலகம் முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இந்து அமைப்புக்கள் நித்தியானந்தரின் படங்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கோவையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 9பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம், புதுச்சேரியில் உள்ள நித்தியானந்தரின் ஆச்சிரமங்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

இந்துமதத்தை அவமானப்படுத்திய நித்தியானந்தரின் சொத்துக்களை முடக்கி வைத்து, அவரை கைது செய்து மரணதண்டனை வழங்கவேண்டும் என்று இந்து அமைப்புகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

தனியார் டி.வி சனலில் சுவாமி நித்தியானந்தர் தொடர்பான பாலியல் படக்காட்சிகள் ஒளிபரப்பானதை அடுத்து திருவண்ணாமலை நித்தியானந்தர் ஆச்சிரமம் முன் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

திருவண்ணாமலையில் பிறந்தவரான சுவாமி நித்தியானந்தர் தனது சொற்பொழிவுகளால் உலகம் முழுவதும் புகழ் பெற்றவர். அவருக்கு ஏராளமான பக்தர்கள் உள்ளனர். திருவண்ணாமலையிலும் கர்நாடக மாநிலம் பெங்களூரிலும் அவருக்கு ஆச்சிரமங்கள் உள்ளன.

திருவண்ணாமலை மாவட்ட இந்து மக்கள் கட்சித் தலைவர் சிவபாபு தலைமை யில் அக்கட்சியினர் திடீரென ஆச்சிரமம் முன் வந்து நித்தியானந்தருக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

அவரது பனரையும் சிலர் கிழிக்க முயன்றனர். இதையடுத்து சிவபாபு உள்ளிட்டவர்களை பொலிஸார் அழைத்துச் சென்றனர் இதனால் அப் பகுதியில் பரபரப்பு நிலவியது. (2-6)




# விலைவாசி உயர்வை எதிர்த்து நாடு தழுவிய முழு அடைப்பு

## பா.ஜனதா கூட்டணி திட்டம்

(போபால்)

விலைவாசி உயர்வை எதிர்த்து பாரதீய ஜனதா கூட்டணி கட்சிகள் பாராளுமன்றத்தில் தொடர்ந்து பிரச்சினையைக் கிளப்பி வருகின்றன. பல்வேறு மாநிலங்களில் போராட்டமும் நடைபெற்று வருகின்றன.

அடுத்த கட்டமாக நாடு தழுவிய முழு அடைப்பு நடத்துவது குறித்தும் கூட்டணி கட்சிகள் ஆலோசனை நடத்தி வருகின்றன. இது தொடர்பாக பாரதீய ஜனதா கூட்டணி அமைப்பாளர் சரத்யாதவ் கூறியதாவது,

விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசின் தவறான கொள்கையே காரணம். அத்துடன் உணவுப் பொருட்கள் பரிமாற்ற திட்டங்களை சரியான முறையில் செயல்படுத்தாததும் இதற்குக்காரணம்.

எனவே விலைவாசி உயர்வைக் கண்டித்து பாராளுமன்றத்தை புறக்கணிக்கும் போராட்டத்தை நடத்தப்போகிறோம். அடுத்து நாடு தழுவிய முழு அடைப்பு நடத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

விலைவாசி உயர்வானது சாதாரண மக்களை மிகவும் பாதித்து இருக்கிறது. இந்திய உணவுக்கழகம் மூலம் உணவு, தானியங்கள் கொள்முதல் செய்வதில் சில மாற்றங்களை மத்திய அரசு கொண்டு வந்தது. இதுவும் விலைவாசி உயர்வுக்கு முக்கிய காரணம் ஆகும்.

மேலும் மத்திய மந்திரி சசிதரூர் தொடர்ந்து பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை கூறி வருகிறார். பல தடவை மன்னிப்புக் கேட்டு விட்ட போதும் தொடர்ந்து இப் படித்தான் பேசிக் கொண்டிருக்கிறார். அவரை மந்திரி பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்றார். (2-6)



பெட்ரோல் மற்றும் டீசலின் விலை உயர்வைக் கண்டித்து, ஐதராபாத்தில் சைக்கிளில் சட்டசபைக்கு வந்த தெலுங்கு தேச கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு.

# இலங்கை தமிழர்களை இந்தியா ஏமாற்றி விட்டது

## கச்சதீவு இலங்கை தமிழர் கவலை

இராமேஸ்வரம் கச்சதீவில் உள்ள புனித அந்தோனியார் ஆலய திருவிழா நடந்தது. இந்த விழாவில் இலங்கை அரசின் அழைப்பின் பேரில் மத்திய அரசின் அனுமதியுடன் இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் , வேர்கோடு பகுதிகளை சேர்ந்த 2910 பேர் பங்கேற்றனர். 4 ஆண்டுகளுக்கு பின் நடந்த இந்த விழாவில் தமிழர்களை விட இலங்கை பக்தர்கள் குறைவாக பங்கேற்றனர்.

விழாவில் பங்கேற்ற இலங்கை தமிழர் அமுதன் கூறியதாவது,

இலங்கையில் கடந்த வருடம் 5ஆவது மாதம் நடந்த போரின் போது மனைவி மோனிடா மற்றும் குழந்தையுடன் முள்ளி வாய்க்கால் பகுதியில் வசித்து வந்தேன். அப்போது பீரங்கி தாக்குதலில் வீட்டுக்குள் வந்த குண்டுதாக்கி கால் துண்டாகி படுகாயம் அடைந்தேன்.

எனது உறவினர்கள் இதில் இறந்து விட்டனர். அங்கிருந்து மீண்டும் மட்டக்களப்பில் சிகிச்சை பெற்றேன். அதன் பின்னர் வவுனியா முகாமில் 20 நாட்கள் தங்கி இருந்தேன். அங்கிருந்து விடுதலையாகி நெடுந்தீவில் வசித்து வந்தேன். இலங்கை தமிழர்களை இந்திய அரசு கை விட்டு விட்டது.

தமிழர்கள் வசித்த பகுதிகளில் சிங்கள மக் களை குடியமர்த்தி வருகின்றனர். போருக்கு பின்னர் கடற்படையின் கெடு பிடிகள் குறைந்துள்ளது. எனது மன நிம்மதிக்காகவும் இனி தமிழ் மக்கள் துயரத்தை அனுபவிக்கக் கூடாது என்பதற்காக பிரார்த்தனை செய்ய சிரமத்துடன் கச்சத்தீவு திரு விழாவில் கலந்து கொள்ளவந்துள்ளேன் என்றார். (2-6)

---

## கொழும்பு தேசிய வைத்தியசாலை
## பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் யாழ் வருகிறார்

இலங்கை பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையாளர் சங்கத்தின் சார்பாக இலங்கை சத்திர சிகிச்சையாளர் கல்லூரியின் ஆதரவுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலை பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி தம்மிக்க திஸாநாயக்க இன்று 04.03. 2010 யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தரவுள்ளார்.

அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியுள்ள காலப் பகுதியில் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை வைத்தியம் தொடர்பாக வைத்தியர்களுக்கு விரிவுரைகளை ஆற்றவுள்ளார்.

அத்துடன் 05.03.2010, 06.03.2010 தினங்களில் காலை 10.00 மணிக்கு பொதுமக்களுக்கான பிளாஸ்டிக் சிகிச்சை தொடர்பான சிகிச்சை நிலையத்தையும் நடாத்தவுள்ளார். இது தொடர்பாக பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணரிடம் ஆலோசனைகள் பெற விரும்புபவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை என்பு முறிவு நெரிவு சிகிச்சை நிலையத்தில் பதிவுகளை மேற்கொண்டு பயன் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(அ-4540)

---

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
## கணனியும் அதனோடு இணைந்த உதிரிகளும் பழுதுபார்த்தல், சேவிஸ் செய்தலுக்குமான கூறுவிலை கோரல் 2010

யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள கணனிகளும் அதனோடிணைந்த உதிரிகளும் திருத்தலுக்குமான கேள்விகள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றது. துறுவிலைகள் 19.03.2010அன்று காலை 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதம் மூலம் வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கூறுவிலையின் இடது பக்க மேல் மூலையில் 'கணனி சேவிஸ், பழுதுபார்த்தல் செய்வதற்கான கூறுவிலை -2010' என எழுதப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. கணனியும் அதனோடிணைந்த உதிரிகளுக்குமுடைய பழுதுபார்த்தல், சேவிஸ் என்பன வைத்தியசாலையிலேயே வைத்து செய்யப்படல் வேண்டும். திருத்தம் செய்வதற்குரிய் இடவசதி ஒழுங்கு செய்து தரப்படும்.
2. நிறுவன உரிமையாளர்/ முகாமையாளர் கணனி சம்பந்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டம் பெற்றவராக/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 5 வருடங்கள் கணனி வன்பொருள் பயிற்சி பெற்றவராக இருத்தல் வேண்டும் (சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்).
3. சேவிஸ், பழுதுபார்த்தல் என்பன 01.04.2010 தொடக்கம் 31.12.2010 வரைக்குமானதாக இருக்கும்.
4. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் அவர்களுடன் மேற்படி வருட காலப்பகுதிக்கு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்.
5. கூறுவிலைகளை ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை கேள்விச்சபை கொண்டிருக்கும்.
6. சேவிஸ், பழுதுபார்த்தல் செய்யப்பட்ட மாதத்துக்கான கொடுப்பனவு அடுத்து வரும் மாததொடக்க 2 வாரங்களுக்குள் வழங்கப்படும்.
7. கீழ்வரும் விடயங்களைப் பூர்த்தி செய்து கணனியும் அதனோடிணைந்த உதிரிப்பாகங்களுக்குமான கூறுவிலைகளும், கூறுவிலை சமர்ப்பிப்பவரினால் தயாரிக்கப்பட்ட கூறுவிலைப்படிவத்தில் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   a. ஒரு கணனி சேவிஸ் செய்வதற்கான கூறுவிலை:...............................
   (கணனி, மொனிட்டர்)

   b. ஒரு பிறின்டர் சேவிஸ் செய்வதற்கான-கூறுவிலை:...........................

   c. ஒரு கணனிக்கு (O/S and other necessary software installation) செய்வதற்கு:.......................................................................

   d. Mother board, hard disk, DVD writer, RAM, UPS battery, Processor, Printer toner என்பவற்றுக்குவுரிய கூறுவிலைகளும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பணிப்பாளர்,
போ.வை.யாழ்ப்பாணம்.

(அ-4548)

---

# கல்வி நடவடிக்கைகளை ஆராய கிழக்கில் திடீர் சோதனைக்குழு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இயங்கிவரும் பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் நட வடிக்கைகளை கண்காணிக்கவும் ஆசிரியர்களின் நடவடிக்கைகளை அவதானிக்கவும் கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் திடீர்சோதனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாக மாகாண கல்வியமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திடீர் பரிசோதனைக் குழுக்கள் அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்கு நேரத்திற்கு சமூகமளிப்பதையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுற்று நிருபத்திற்கமைய நேரசூசி வழங்கப்பட்டு கற்பித்தல் பணியில் ஈடுபடுவதையும் கண்காணிக்கும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

வலய மட்டம், கோட்ட மட்டத்தில் அமைக்கப்படவுள்ள இத் திடீர் பரிசோதனைக் குழுக்களில் கோட்டமட்ட கல்வி பணிப்பாளர்கள் இடம்பெறுவதோடு ஒரு நாளைக்கு மூன்று பாடசாலைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கிழக்கு மாகாணத்தில் உள்ள வலயக்கல்வி அலுவலகங்கள் போன்றவற்றை கண்காணிக்க தனியான குழு அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# பீதுறுதாலகால மலைத்தீ கட்டுப்பாட்டுக்குள்

(கொழும்பு)

பீதுறுதாலகால மலைத்தொடரில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் தாமாக முன்வந்து தீயணைப்பு நடவடிக்கையில் பங்குகொண்டிருந்ததாக மாவட்டச்செயலாளர் பீ.ஜீ.பீ. குமாரசிறி தெரிவித்தார்.

ஞாயிறு மாலையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட தீ மீண்டும் இரவுவேளையில் பரவக்கூடிய அபாயம் தென்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் பொதுமக்கள், விமானப் படை, வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் நுவரெலியா மாநகரசபைத் தீயணைப்புப் பிரிவினர் ஒன்றிணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இத்தீயினால் 3 ஏக்கர் நிலப்பரப்பு சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. எதிர்காலத்தில் இவ்வாறு திடீரென ஏற்படக்கூடிய தீயைத் தடுப்பதற்கு பிரதேச மக்களின் உதவி பெருமளவில் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

பிரதேச மக்களுக்கு உரிய சீருடைகளையும், விசேட உபகரணங்களையும் பயிற்சிகளையும் வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கலந்துரை யாட லொன்றும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## வாழைச்சேனையில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

புலிகளினால் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பாதுகாப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினரே இந்த ஆயுதங்களை கண்டுபிடித்துள்ளனர். காட்டுப் பகுதியில் புதைத் துவைக்கப்பட்டிருந்த இந்த ஆயுதங்களில் எஸ்.எப்.ஜி. 87 ரக கைக்குண்டொன்று ரி 56 ரக ரவைகள், 110 பயணப்பொதி என்பன அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். ஆயுதங்கள் வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (2-6)

# எயிட்ஸ் நோயினால் அதிகளவு பெண்கள் வருடாந்தம் உயிரிழப்பு

## ஐ.நா.தெரிவிப்பு

(கொழும்பு)

எயிட்ஸ் நோயினால் அதிகளவான பெண்கள் வருடாந்தம் உயிரிழப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது. குறைந்த வயதில் நோயினால் உயிரிழக்கும் பெண்களில் அதிகமானவர்கள் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தெரி விக்கப் படுகிறது.

எயிட்ஸ் நோய் தொடர்பில் அமெரிக்காவில் நடைபெற்று வரும் பத்து நாள் கருத்தரங்கின் போது இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பெண்களை அதிகளவு ஆபத்தில் சிக்க வைக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான திட்டவரைவொன்று தயாரிக்கப்படவுள்ளது. உலகம் முழுவதிலும் 70 வீதமான பெண்கள் பாதுகாப்பற்றபாலுறவைமேற்கொள்ள பலவந்தப்படுத்தப்படுவதாகவும். இவ்வாறான வன்முறைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண் டும் எனவும் குறிப்பிடப்படுகிறது. ஆண்களை விடவும் பெண்களே அதிகளவில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பெண்களுக்கு உரிய சமத்துவம் வழங்கப்படாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (2-6)

---


ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



## ஸ்ரீ பகவானின் 61ஆவது ஜென்ம தினவிழா

திகதி: 07.03.2010 (ஞாயிற்றுக்கிழமை)
இடம்:- திரு. வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர லட்சுமி நாராயண மண்டபம் (பெருமாள் கோவில்)
நேரம்: காலை 9.00 மணி

61 சங்கு திரவியங்களுடன் பாத பூஜையும்,61 சிட்டி தீப பூஜையும், 61 திரவியங்கள் (பிரசாதம், பழ வகைகள் உட்பட) மற்றும் 108 திருவிளக்கு பூஜையும் நடைபெறவுள்ளது.

விசேடமாக அம்மா பகவானின் ஸ்ரீமூர்த்தி ஊஞ்சல் பூஜையும், ஊஞ்சல் பாடல்களுடன் நடைபெறும். இப் பூஜைகள் அனைத்தும் முதல் முறையாக நடைபெறவுள்ளது. இதில் பக்தர்கள் கலந்து கொண்டு அம்மா பகவானின் அருள் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

108 திருவிளக்கு பூஜையில் கலந்து கொள்ளும் பக்தர்கள் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் சனிக்கிழமை (06.03. 2010) மாலை 3 மணி தொடக்கம் 6 மணி வரை பதிவுகளை மேற்கொள்ளவும். அன்னதானமும் வழங்கப்படும்.

T.P.: 021 222 2935
071 8565727

ஸ்ரீ கல்கி ஆன்மீக மையம்,
யாழ். தலைமை அலுவலகம்,
மணியர்பதிலேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(அ-4541)

# சந்திரனில் பனி மலைகள் ஏராளம் நாசா விஞ்ஞானிகள் புது ஆய்வு

(வோஷிங்டன்)

நிலவில் பனி உறைந்த நிலையில் உள்ள 40க்கும் மேற்பட்ட மலைபோன்ற படிவங்கள் பிரம்மாண்டமாக உள்ளதை, சந்திராயன் விண்கலத்துடன் அனுப்பப்பட்ட அமெரிக்காவின் " மினி-சார்" ராடர் கண்டறிந்துள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தினால் வடிவமைக்கப்பட்ட சந்திராயன் - 1 விண்கலம் கடந்த 2008 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், நிலவுக்கு அனுப்பப்பட்டது. நல்லமுறையில் செயல்பட்ட இந்த ஆளில்லாத விண்கலம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் திடீரென செயலிழந்தது. இருப்பினும் இந்த விண்கலம் நிலவில் தண்ணீர் உள்ளதைக் கண்டுபிடித்தது. சந்திராயன் விண்கலத்துடன் அனுப்பப்பட்ட அமெரிக்காவின் "மினிசார்" ராடர் சாதனம் சந்திரனின் வட துருவ பகுதிகளை படம்பிடித்து அனுப்பியுள்ளது.

ரேடியோ அலைகள் பிரதிபலிப்பை கொண்டு பல பரிமாணங்களில் எடுக்கப்பட்ட படங்க்ளை அமெரிக்காவின் நாசா விஞ்ஞானி பால் ஸ்புடீல் ஆய்வு மேற்கொண்டார். மினி-சார் எடுத்து அனுப்பியபடங்களை ஆய்வு செய்தபோது, 40 மலைகள் பனி மூடிய நிலையில்இருந்தது தெரிந்தது. சந்திரனின் புறப்பரப்பில் வான் பொருட்கள் ஏற்படுத்திய பள்ளங்கள் மைல் கணக்கில் உள்ளன.

அம் மாதிரி உள்ள பல பகுதிகள் 2 கி.மீ. முதல் 15 கிலோ மீற்றர் சுற்றளவு கொண்டவை. கிரேட்டர் என்றழைக்கப்படும் இவை மீது சூரிய வெளிச்சம் விழுவதில்லை. பூமியில் இருந்து பார்க்கும் போதும் இந்தப் பகுதி தெரிவதில்லை. ஆனால், இதன் மீது பனிப் படலம் இருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

சந்திரனில் எப்படி பனி உருவாகிறது என்பது போன்ற விபரங்கள் இந்தப் படங்களின் மூலம்அறியமுடியும் என்று பால் தெரிவித்துள்ளார். ஏற்கனவே தண்ணீர்த்துளிகள் பற்றி சந்திராயன்-1 கண்டறிந்ததன் தொடர்ச்சியாக பனிப் படலங்கள் கண்டறியப்பட்டிருப்பது பெரிய அளவிலான விஞ்ஞான வெற்றியாகும். (2-6)

அமெரிக்காவில்

# உப்பைக் குறைவாக பயன்படுத்துவதால் 1.53 இலட்சம் கோடி ரூபாய் சேமிப்பு

உப்பை 10 சதவீதம் குறைவாக பயன்படுத்துவதால் பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் மாரடைப்பு மற்றும் ஸ்ட்ரோக் போன்றவற்றில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். மேலும் அமெரிக்க அரசுக்கு சுகாதாரத்துறை தொடர்பான செலவு 1.53 இலட்சம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளது என அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அமெரிக்க ஆய்வாளர்கள் கூறியதாவது,

உணவில் அதிகளவு உப்பு சேர்த்துக் கொள்வதே உயர் இரத்த அழுத்தத் திற்கான முக்கிய காரணம். அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின் அரசுகள் எதிர்காலத்தில் மாரடைப்பு மற்றும் ஸ்ட்ரோக் போன்ற நோய்களில் இருந்து மக்களை காப்பாற்ற உப்பின் பயன்பாட்டை குறைக்க தீர்வு காண்பது குறித்து ஆலோசித்தனர்.

இதற்கு அவர்கள் உப்பின் பயன்பாட்டை குறைக்கும் பிரசாரமே சிறந்தது என கருதினர். அரசின் இந்த முயற்சியால் அமெரிக்கர்கள் மத்தியில் உப்பின் பயன்பாடு 9.5 சத வீதம் குறைந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த பிரசாரத்தில் அமெரிக்காவில் 45 முதல் 80 வயதுக்குட்பட்டவர்கள் இடையே 5.13 இலட்சம் பேரை தங்கள் வாழ்நாளில் ஸ்ட்ரோக்கில் இருந்தும் 4.80 இலட்சம் பேரை மாரடைப்பில் இருந்தும் பாதுகாக்கப்பட்டுள்ளனர். இதனால் இவர்களின் மருத்துவ செலவினங்களும் தவிர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் இயக்குனர் தாமஸ் பரீடன் கூறுகையில், ஒரு நாளில் 2.3 கிராம் உப்பை உணவில் சராசரி நபர் சேர்த்துக் கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் 75 சதவீதம் அமெரிக்கர்கள் பரிந்துரைக்கப்பட்டதை விட அதிகளவு உப்பை உணவின் மூலம் உட்கொள்கின்றனர். ஏனென்றால் அமெரிக்கர்களுக்கு நான்கில் மூன்று பங்கு உப்பு பதப்படுத்தப்பட்ட சிப்ஸ் போன்ற உணவு மற்றும் உணவகங்களில் உள்ள உணவின் மூலம் கிடைக்கிறது.

எனவே உணவு தொழிற்சாலையின் ஒத்துழைப்பு இன்றி அமெரிக்கர்கள் உணவின் மூலம் உட்கொள்ளும் உப்பை குறைக்க முடியாது என்றார். (2-6)

# உலகம் அழிந்து விடும் என்ற பயத்தில் குழந்தைகளை சுட்டுவிட்டு தாமும் தற்கொலை

## ஆர்ஜென்டீனா தம்பதியின் முடிபு

ஆர்ஜென்டீனா நாட்டில் உள்ள கோயா என்ற இடத்தைச் சேர்ந்தவர் லோட்டரோ. அவருடைய மனைவி மரியம். இவர்களுக்கு ஆண் மற்றும் பெண் குழந்தைகள் இருந்தனர். லோட்டரோ தம்பதியினர் உலகம் வெப்பமயமாவதால் விரைவில் உலகம் அழிந்து விடும் என பயந்தனர்.

எனவே உலகம் அழியும் போது அதில் சிக்கி பலியாகி விடக்கூடாது என பயந்த அவர்கள் குடும்பத்தோடு தற்கொலை செய்ய முடிவு செய்தனர். இதையடுத்து கணவன்- மனைவி இருவரும் தங்கள் இரு குழந்தைக ளையும் சுட்டு விட்டு தங்களை தாங்களே சுட்டு தற்கொலை செய்து கொண்டனர்.

ஆனால் 2 குழந்தைகளையும் சுட்டதில் ஆண் குழந்தை மட்டும் உயிரிழந்தது. 7 மாத பெண் குழந்தை நெஞ்சில் குண்டு பாய்ந்து இருந்தது. ஆனாலும் உயிரிழக்கவில்லை.

3 நாட்களுக்கு பிறகு தான் பொலிஸாருக்கு இந்த சம்பவம் தெரிய வந்தது. அவர்கள் வீட்டுக்கு சென்று பார்த்த போது பெண் குழந்தை மட்டும் உயிருக்கு போராடி கொண்டுருந்தது. அவளை வைத்தியசாலையில் சேர்த்துள் ளனர்.

இந்த தம்பதியினர் தற்கொலைக்கான காரணம் குறித்து எழுதிய கடிதம் ஒன்று அருகில் இருந்தது. அதில் உலக வெப்பமாயமாவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்காததே காரணம் என்று குற்றஞ்சாட்டியிருந்தனர்.

# அவுஸ்திரேலியாவில் பெய்த மீன் மழை

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் வடக்கு பகுதியில் லஜாமானு நகரம் உள்ளது. இது அங்குள்ள ஆற்றில் இருந்து 326 மைல் தொலைவில் உள்ளது. இங்கு 2 நாட்களாக கடுமையான மழை பெய்தது. அப்போது வானத்தில் இருந்து மழை நீருடன் சேர்ந்து நூற்றுக் கணக்கான மீன்களும் கொட்டியது.

அந்த மீன்கள் வெள்ளை நிறத்தில் இருந்தன. அவை இன்னும் உயிருடன் இருக்கின்றன. மீன் மழை பெய்ததை பார்த்த மக்கள் மிகவும் ஆச்சரியம் அடைந்தனர்.

கடந்த 30 ஆண்டுகளில் இங்கு இது வரை 3 தடவை மீன் மழை பெய்துள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 1974 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் இது போன்ற மழை பெய்ததாக கூறுகின்றனர். (2-6)

# சிலியில் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காத நிலையில் மக்கள் அவதி

சிலி நாட்டில் ஏற்பட்ட பூகம்பத்தில் அதிகாரப்பூர்வமாக இன்னும் மீட்பு பணிகள் முடியவில்லை. இடிபாடுக்குள் இன்னும் பிணங்கள் கிடக்கின்றன.

நிவாரண பணியும் முழுமையாக நடைபெறவில்லை மக்களுக்கு உணவு ,தண்ணீர் போன்ற அடிப்படை அத்தியாவசிய பொருட்கள் கூட கிடைக்கவில்லை.

இதனால் மக்கள் கடைகளில் புகுந்து பொருட்களை கொள்ளையடித்து வருகின்றனர். இதை தடுக்க பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். பூகம்பம் அதிக அளவில் பாதிப்பு ஏற்படுத்திய கான்செப்சியன் நகரில் கடைகளில் பொருட்களை கொள்ளையடிக்க சென்றவர்களை இராணுவத்தினர் தடுத்தனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த மக்கள் அங்குள்ள சூப்பர் மார்க்கெட்டுக்கும் ஏராளமான கடைகளுக்கும் தீ வைத்தனர். இதையடுத்து அந்த மக்கள் மீது இராணுவத்தினர் சுட்டனர். இதில் ஒருவர் உயிர் இழந்தார். இந்த சம்பவத்தை அடுத்து கான்செப்சியன் நகரில் கூடுதலாக 7 ஆயிரம் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர்.

பூகம்பத்தினால் துண்டிக்கப்பட்ட மின்சாரம் இன்னும் சீர்படுத்தப்படவில்லை. குடிநீர் விநியோகம் இன்னும் சீராகவில்லை. சிலி நாடு முதலில் வெளிநாட்டு நிவாரண உதவிகளை ஏற்க மறுத்தது. இப்போது வெளிநாட்டு உதவிகளை ஏற்பதாக அறிவித்துள்ளது. இதையடுத்து பல நாடுகள் உதவியளிப்பதாக அறிவித்துள்ளன. (2-6)

# பொம்மை விமானம் மோதி பொறியியலாளர் மரணம்

(கோலாலம்பூர்)

மலேசியாவில் ரிமோட் மூலம் இயங்கும் பொம்மை விமானம் ஒன்று தாக்கியதால் எலக்ட்ரிக்கல் பொறியியலாளர் ஒருவர் உயிரிழந்தார்.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்தியில் மலேசியாவின் கோலாலம்பூரில் ரிமோட் மூலம் விமானங்களை இயக்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் ஏராளமானோர் பங்கேற்றனர். அப்போது சீன தயாரிப்பான ரிமோட் கன்ட்ரோல் மூலம் இயங்கும் பொம்மை விமானம் ஒன்று பொறியியலாளரான முஸ்தாப உஸ்மான் (48) என்பவரது தலையின் வலது பக்கம் மோதியது. இதனால் அவரது தலையில் இரத்தப் போக்கு ஏற்பட்டு கோமா நிலைக்கு சென்றார்.

புத்ரஜயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முஸ்தபா உஸ்மான் உயிரிழந்தார். முஸ்தபா மீது மோதிய விமானத்தின் உரிமையாளரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்துக்கு காரணமான பொம்மை விமான உரிமையாளரின் கவனக்குறைவே இந்த விபத்துக்கு காரணமாக கருதப்படுகிறது.

முஸ்தபா தன் விமானத்தை மேலெழுப்ப முயற்சித்துக்கொண்டிருந்த போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. அப்போது 6 மீ. தொலைவில் நின்றிருந்த விபத்துக்கு காரணமான விமானத்தின் உரிமையாளர் தன் கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து நடந்திருக்கும் என்று கூறப்பட்டது. (2-6)




# தலிபான்களால் கடத்தப்பட்ட சீக்கியர் குண்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட சீக்கியர் ஒருவர் குண்டு காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார். பாகிஸ்தானில் பெஷாவர் பகுதியில் உள்ள திராக் என்ற இடத்தில் வசித்த சீக்கியர்கள் சுர்ஜித் சிங், குர்விந்தர் சிங் ,ஜஸ்பால் சிங் ஆகியோர் கடந்த மாதம் தலிபான் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டனர். இவர்களை விடுவிக்க பயங்கரவாதிகள் மூன்று கோடி ரூபாய் பிணையத் தொகை கேட்டனர். பணம் கிடைக்காதததால் ஜஸ்பால் சிங்கின் தலையை வெட்டி கொலை செய்து கைபர் பகுதியில் வீசி விட்டு அருகே எச்சரிக்கை கடிதத்தையும் வைத்துள்ளனர்.

இந்த சம்பவத்துக்கு இந்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்தது. பாக். இராணுவம் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு கைபர் பகுதியில் பழங்குடிகள் வசிக்கும் அரக்சாய் என்ற இடத்தில் பயங்கரவாதிகளுடன் சண்டையிட்டு இரண்டு சீக்கியர்களையும் மீட்டது.

இந்த தாக்குதலில் பயங்கரவாதிகள் சிலர் கொல்லப்பட்டனர் இந்த சண்டையில் சுர்ஜித்சிங்கின் உடலில் இரண்டு துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன. இவர் இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். குர்விந்தர் சிங் பெஷாவரில் உள்ள தன் வீட்டுக்கு சென்று விட்டார்.

தற்போது சுர்ஜித்சிங் உடல்நிலை தேறி வருவதாக அவரது சகோதரர் ராம்சிங் தெரிவித்துள்ளார். (2-6)

ஹெயிட்டியில்

# பலத்த மழை, வெள்ளம் காரணமாக 13 பேர் பலி

(போர்ட் ஓப் பிரின்ஸ்)

ஹெயிட்டியில் பூகம்ப சோகம் இன்னும் தீராத நிலையில் பலத்த மழையின் காரணமாக 13 பேர் பலியாகினர். அங்கு கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் அதிபர் மாளிகை உள்ளிட்ட கட்டடங்கள் தரைமட்டமாயின. மூன்று இலட்சம் பேர் இந்த பூகம்பத்தில் பலியாயினர்.

நிவாரணப் பணிகள் இன்னும் முழுமையடையாத நிலையில் இந்த நாட்டை மீண்டும் ஒரு சோகம் தாக்கியுள்ளது. பலத்த மழை காரணமாக வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தலைநகர் போர்ட் ஓவ் பிரின்சிலிருந்து 160 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள லெஸ்கேயஸ் நகரம் இந்த மழையில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு அருகில் உள்ள கேவிலோன் செயின்ட் லூயிஸ் டூசுட் பகுதிகளில் மழை மற்றும் வெள்ளத்தால் 13 பேர் பலியாகியுள்ளனர். (2-6)

# மக்களை மகிழ்விக்க பலம் மிக்க அரசு அமையவேண்டும்- விமல் வீரவன்ச

அமைச்சர்களை மகிழ்விப்பதை விடுத்து மக்களை மகிழ்விக்க மூன்றில் இரண்டு பலம் மிக்க அரசொன்று அமைய வேண்டுமென விமல் வீரவன்ச கூறினார்.

தேசிய சுதந்திர முன்னணியால் பன்னிப் பிட்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றம் பலமின்றி இருந்தால் அங்குள்ள அனைவரையும் சந்தோஷப் படுத்த அவர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கவேண்டுமென்றும் இதனால் நாடு பாதாளத்தை நோக்கிச் செல்லுமெனக் கூறிய அவர் மக்களை மகிழ்ச்சிப்படுத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையெனச் சொன்னார். 2005 ஆண்டைவிட 2010 இல் ஜனாதிபதிக்கு அதிக பொறுப்பு வழங்கப்படுவதாகத் தெரிவித்த விமல் வீரவன்ச தவறானவர் களை தெரிவுசெய்தால் அவர்களுடன் தான் ஜனாதிபதி யுத்தம் செய்ய வேண்டியேற்படும் என்றார். (2-6)

# தமிழ் சினிமாவில் புலிகளின் பணம்; முன்னாள் மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ் சினிமாவில் விடுதலைப் புலிகளின் பணம் ஆண்டுக்கு 350 கோடி ரூபாய் வரை புழக்கத்தில் விடப்படுகிறது. சட்டம் ,ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் கூட்டங்களில் பேசி வரும் திரைப்பட இயக்குனர் சீமான் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் எஸ் ஆர். பால சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

தமிழ் சினிமாவில் ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் வரை முதலீடு செய்யப்பட்டு வருகிறது.

இதில் வெளிநாடுகளிலிருந்து விடுதலைப்புலிகளின் பணம் இங்குள்ள முக்கிய [illegible]கள் மூலம் தமிழ்ப்படத் தயாரிப்புகளில் புழக்கத்தில் விடப்பட்டுள்ளது. ஆயிரம் கோடியில் மூன்றில் ஒரு பங்கு அதாவது 350 கோடி ரூபாய் வரை தமிழ்ப்படங்களில் புழக்கத்தில் விடப்பட்டுள்ளது. இதனால் தான் புதிய படங்களின் தயாரிப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளன. கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரைப்பட இயக்குனர் சீமான் நாம் தமிழர் என்ற இயக்கத்தை தொடங்கி செயல் வீரர்கள் கூட்டத்தை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தியிருக்கிறார். இக்கூட்டங்களில் சீமான் பேசியவைகள் இந்திய இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிரானது. பணத்தை பற்றி கவலைப்படாதே. எத்தனை ஆயிரம் கோடி பணம் தேவைப்பட்டாலும் அதைத் தர பலரும் தயாராக இருக்கிறார்கள் என்றும் உறுதியளித்துள்ளார்.

இந்திய ஒருமைப்பாட்டின் மீது நம்பிக்கை வைத்து கருணாநிதி செயலாற்றி வருவதை சீமானால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தலைவர்களுக்கு எதிராக மக்களை தூண்டி விடும் வகையிலும் சீமான் பேசி வருகிறார். இந்தியா இனிமேல் எங்களுக்குப் பக்கத்து நாடு தான். எங்கள் நாடு இல்லை. இனிமேல் இந்திய இறையாண்மை என்று யார் பேசினாலும் அவர்களை நாடு கடத்துவோம். தமிழர் அல்லாதோர் கடைகளையும் நிறுவனங்களையும் அடித்து நொறுக்குங்கள். எதைப்பற்றி யும் கவலைப்படாதீர்கள். நான் இருக்கிறேன் என்றும் சீமான் பேசிவருகிறார். சீமானின் நடவடிக்கையை தடுத்து நிறுத்தாவிட்டால் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விடும். முதல்வர் கருணாநிதி உட்பட பல தலைவர்களுடைய உயிருக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை ஏற்படும். இவ்வாறு பால சுப்பிரமணியம் மேலும் கூறினார். (2-6)

# கடற்பரப்பில் தத்தளித்த வெளிநாட்டவர் இலங்கை கடற்படையால் மீட்பு

## காலியில் சம்பவம்

(கொழும்பு)

இலங்கை தென்மாகாணத்தின் காலி பிரதேச கடற்பரப்பில் தத்தளித்துக்கொண்டிருந்த 12 வெளிநாட்டவர்களை இலங்கை கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

படகில் ஏற்பட்ட தீ விபத்தையடுத்து கடலில் தத்தளித்த 12 வெளிநாட்டவர்களை இவ்வாறு கடற்படையினரால் காப்பாற்றப்பட்டவர்கள் இந்தோனேசியாவுக்குச் சொந்தமான குறிப்பிட்ட படகு இலங்கைக் கடலில் வைத்து தீ விபத்துக்குள்ளானது.

படகிலிருந்தவர்கள் கடலில் தத்தளிப்பதை அவதானித்த காலி மீன்பிடி துறை முகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் அவதானித்து துரித நடவடிக்கை எடுத்ததன் மூலம் கடற்படையால் மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட வெளிநாட்டவர்களில் ஒரு தாய்லாந்து நாட்டவரும் 11 இந்தோனேசிய நாட்டவர்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினார்.

மீட்கப்பட்ட வெளிநாட்டவர்கள் காலி துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# மேலதிகமாக இரண்டாம் மொழியை போதிக்க கல்வியமைச்சு திட்டம்

நாடாளவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு தாய் மொழிக்கு மேலதிகமாக இரண்டாம் மொழியினைப் போதிக்கும் நடவடிக்கைகளை இந்த வருடம் முன்னெடுப்பதற்கு கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதன் பிரகாரம் இரண்டாம் மொழியாக சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியும் தமிழ்மொழி மூல மாணவர்களுக்கு சிங்கள மொழியும் போதிக்கப்பட்டு வருகின்றன.

பல்லின மக்கள் வாழும் எமது நாட்டில் மொழிப் பரிமாற்றத்தின் மூலமாக புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் இரண்டாம் மொழியைக் கற்பிக்கும் வேலைத்திட்டம் பாடசாலைகளில் அமுல் படுத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை 2010 கல்வியாண்டில் தேசிய இரண்டாம் மொழி பாடபோதனை நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாகவும் இக்கூட்டத்தில வலய ரீதியாக நியமிக்கப்பட்டுள்ள இரண்டாம் மொழி இணைப்பாளர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் மாணவர்களுக்கு இரண்டாம் மொழியைப் போதிப்பது பற்றி அமுல் படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.யூ.விஜேரத்ன தெரிவித்துள்ளார். (2-6)

# தேசிய பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பில் ஐ.தே.க.தெளிவான நிலைப்பாட்டிலுள்ளது

## ஜயலத் ஜயவர்த்தன

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிப்பது தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழு காலத்தை வீணடித்துக்கொண்டிருந்தமையின் காரணமாகவே ஐக்கிய தேசிய கட்சி அதில் பங்கெடுக்கவில்லை என்று கட்சியின் மனித உரிமைகள் மற்றும் நிவாரணம் தொடர்பான உதவிச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத்ஜயவர்த்தன தெரிவித்தார். இவ்விடயம் குறித்து முன்னாள் எம்.பி.மேலும் கூறியதாவது,

சர்வகட்சி பிரதிநிதிகள் குழு கடந்த காலங்களில் காலத்தை வீணடிக்கும் செயற்பாடுகளையே மேற்கொண்டு வந்தது. எனவே ஐக்கிய தேசிய கட்சி அதிலிருந்து விலகியது.

தேசிய பிரச்சினை தீர்வு தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி அன்றிலிருந்து ஒரே நிலைப் பாட்டிலேயே இருக்கின்றது. அதனை உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் நாங்கள் தெளிவாக விளக்கியுள்ளோம்.

அதாவது அரசியல் பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட துறைகளில் அதிகா ரப் பகிர்வை ஏற்படுத்த வேண்டும். அத் துடன் ஐக்கிய இலங்கைக்குள் சகல இன மக்களும் சகல உரிமைகளையும் பெறும் வகையிலான அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதில் ஐக்கிய தேசிய கட்சி தெளிவான நிலைப் பாட்டில் உள்ளது.

மேலும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நாட்டில் அறிமுகப் படுத்தியது ஐக்கிய தேசிய கட்சிதான் என்பது அனைவருக்கும் தெரியும். அந்த வகையில் தேசிய பிரச்சினை தீர்வு விட யம் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி தெளி வான நிலைப்பாட்டில் உள்ளது. நாங்கள் எப்போதும் எமது கொள்கையி லிருந்து மாறியதில்லை.

இதேவேளை எதிர்வரும் பாராளு மன்ற தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசிய முன்னணி மிகவும் உற்சாகமாக செயற்பட்டு வருகின்றது. எமது கொள்கைகளை நாட்டு மக்களுக்கு தெளிவு படுத்தி வருகின்றோம் என்றார். (2-6)


பாராளுமன்றத் தேர்தல் - 2010



தேர்தல் மாவட்டம் இல. 10
யாழ்ப்பாண மாவட்டம்.

சுயேட்சைக் குழு இல. 11



X



தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக
அதனை நன்கு புரிந்து கொண்ட
அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின்
தலைமையைப் பலப்படுத்த
இலங்கை மக்கள் கட்சியில் இணைந்துள்ளேன்.
உங்கள் வாக்கை மாங்கனி சின்னத்திற்கு இடுவதுடன்
விருப்பு வாக்கு 1 ஐ எனக்கு அளிக்குமாறு
வேண்டுகின்றேன்.

2 கலாநிதி கந்தையா குணராசா 1

புத்திலங்கை



மீண்டும் GNANA (ஞானா) BEAUTY PARLOUR

அதி நவீன முறையில்
* Bridal/Convocation/Dance make up
* Facial for different types of skin with treatment
* manicure & pedicure
* Hair cutting/Hair styles
* Threading
* waxing
* wedding/ Birthday Cake orders are undertaken



மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் தொடர்புகொள்ளவும்


162,ஆடியபாதம் வீதி (பொற்பதி சந்திக்கு அருகாமையில்),
கொக்குவில்.
T.P: 222 3885


(831)


# புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாலய நூற்றாண்டு விழாக் காட்சிகள்












நூற்றாண்டு விழாவையொட்டி மங்கல வாத்திய இசையுடன் விநாயகர் சிலை பாடசாலைக்கு எடுத்துவரப்படுவதையும், பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நுழைவாயில் திறந்து வைக்கப்படுவதையும், புதிய நூலகத்தினை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் திறந்துவைப்பதையும் முதல் மூன்று படங்களிலும், நூலகத்துக்கான புத்தகங்களை தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர் சொல்வேந்தர் சுகிசிவம், அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கத்திடம் கையளிப்பதையும், மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் மற்றைய படங்களில் காணலாம்.

## வேட்பாளரின் உளச்சுகாதாரம் தொடர்பில் சோதனை நடத்தப்பட வேண்டும்

### முத்து ஹெட்டிகம

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களினதும் உளச் சுகாதாரம் தொடர்பில் சோதனை நடத்தப்பட வேண்டுமென தென் மாகாணசபை உறுப்பினர் நிசாந்த முத்து ஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் அளவிற்கு உளச்சுகாதாரம் காணப்படுவதாக மருத்துவர்களினால் உறுதிசெய்யப்பட்ட ஒரே அரசியல்வாதி தாம் மட்டுமே என அவர் சுட்டிக்காட்டியுள்ளதும் வேட்பாளர்களின் மனநிலை தொடர்பில் கட்சித்தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், மனநிலை பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காலியில் நடைபெற்ற அரசியல் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தற்போது தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் முதுகெலும்பு அற்றவர்கள் எனவும் மறைந்த ரிச்சர்ட் பத்திரன மற்றும் அமரசிறி தொடங்கொட போன்றவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு அரசியல் செய்யவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## வினாத்தாள் திருடியோர் மீது கடுமையான நடவடிக்கை

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஊவா கல்வியியல் கல்லூரிகளில் இறுதித் தவணைப் பரீட்சை வினாத்தாள்களை திருடியோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வியமைச்சு தெரிவிக்கிறது.

ஆசிரியத் தொழிலுக்கு முன்மாதிரியாக இவர்கள் திகழ்ந்திருக்க வேண்டுமென கல்வியமைச்சின் செயலாளர் நிமல்பண்டார கூறுகிறார்.

ஆசிரியத்தொழிலில் இணைந்துகொள்ள எதிர்பார்க்கும் இவர்கள் மேற்கொண்ட இந்தச் செயற்பாட்டை மிகக் கடுமையாகக் கருதுவதாகவும் இந்த வினாப்பத்திரங்களை அச்சிடுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவிட்டுள்ளதென சுட்டிகாட்டிய அவர் , மாணவர்கள் ஒரு அமைப்பாக இந்த வினாப்பத்திரங்களை திருடியுள்ளதாகவும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள மாணவர்கள் மீது விசாரணைகள் நடைபெறுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாடெங்கும் உள்ள 17 கல்வியியற் கல்லூரிகளில் சுமார் 3000 மாணவர்கள் பயிற்சி பெற்றுவருகின்றனர். வினாப்பத்திரங்கள் காணாமல் போனதையடுத்து அனைத்துக் கல்வியியற் கல்லூரிகளினதும் பரீட்சைகள் இரத்துச் செய்யப்பட்டதுடன் பரீட்சைத் திணைக்களமும் விசாரணைகளை நடத்தியுள்ளது.

நடத்தமுடியாதுபோன இப் பரீட்சையை மீண்டும் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார். (2-6)

## எடைகூடிய சிறுவர்களுக்கு இருதய நோய் ஏற்படக்கூடிய அபாயம்

### ஆய்வாளர்கள் தெரிவிப்பு

எடைகூடிய சிறுவர் சிறுமியருக்கும் இருதய நோய் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எடை அதிகமாகவுள்ள மூன்று வயது குழந்தைகளுக்கு கூட எதிர்காலத்தில் இருதய நோய் தாக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப் பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

16 ஆயிரம் சிறுவர் சிறுமியரிடம் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அநேகமான எடை கூடிய குழந்தைகளுக்கு இருதயத்துடன் தொடர்புடைய நோய்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்த ஆய்வினை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், இன்னமும் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட வேண்டும் எனவும் மற்றுமொரு சாரார் கருத்து வெளியிட்டுள்ளனர். குழந்தைப் பருவம் முதல் ஆரோக்கியமான உடல் எடையைப் பேண வேண்டியது மிகவும் அவசியமானதென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறுபராயம் முதலே ஆரோக்கியமான வாழ்க்கை முறைமைகளை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை சிறுவர்களுக்கு உணர்த்த வேண்டுமென பெற்றோர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளனது.

மேலும் உரிய உணவுப்பழக்க வழக்கம் மற்றும் உடற்பயிற்சிகளின மூலம் உடல் எடைப்பிரச்சினைக்கு சுலபமாகத் தீர்வு காண முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (2-6)

# தேர்தல் ஆணையாளரின் அறிவித்தலை மீறிய இடமாற்றங்கள் சட்டரீதியானவையல்ல

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் நடைபெறும் போது இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட முடியாது என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ள நிலையில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள் சட்ட ரீதியானவை அல்ல . எனினும் இடமாற்றங்கள் தொடர்ந்து மேற் கொள்ளப்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் அலுவலகங்களுக்கு அழைக்கப்பட்டு இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதும் அவர்களுக்கு எழுத்து மூலமான அறிவித்தல்கள் அனுப்பப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே 20 கல்வித்துறை அதிகாரிகளின் இடமாற்றங்கள் சட்டரீதியானது அல்ல எனவும் இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் தபால் மூலம் வாக்களிக்கும் வாக்காளர் அட்டைகளை உறுதிப்படுத்தியதால் அரசியல் காரணங்களை முன்வைத்து இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அக்கரைப்பற்று, கல்குடா, கட்டை, பறிச்சான், கல்முனை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலேயே இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என தேர்தல் ஆணையாளர் கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள செயலாளருக்கு உத்தரவிட்ட போதும் அதனை அவர்கள் நிறுத்தவில்லை என்றும் இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் எம்.மகேந்திரன தலைமையில் நடைபெறவுள்ளது. (4-14)

## இலங்கைக்கு எரிபொருள் வழங்க ரஷ்யா இணங்கியுள்ளது

(கொழும்பு)

இலங்கைக்கு எரிபொருள் விநியோகம் செய்வதற்கு ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளது. காஸ்புரும் என்ற நிறுவனத்தின் ஊடாகவே இந்த எரிபொருள் விநியோகம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரஷ்யா சென்றிருந்த போது இதுகுறித்த பேசப்பட்டதாகவும் இந்த ஆண்டு இறுதிக்குள் இறுதி இணக்கப்பாடு எடுக்கப்படும் எனவும் இலங்கைக்கான ரஷ்யத் தூதராலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (2-6)

## வேட்பாளர் தொகை அதிகரிப்பால் வாக்குப்பெட்டிகள் தொடர்பில் சிக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் பயன்படுத்திய வாக்குப் பெட்டிகளில் சில மாவட்டங்களில் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள தேர்தல்கள் திணைக்களம் பொதுத்தேர்தல்கள் வாக்களிப்பிற்காக பெட்டிகளையா? துளையையா? பெரிதாக்குவது என்பது தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக சில மாவட்டங்களில் பெருந்தொகையான கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுவதனால் வேட்பாளர்களின் எண்ணிக்கை மட்டுமல்லாது வாக்குச்சீட்டின் நீளமும் அதிகரித்துள்ளது.

அவ்வாறான மாவட்டங்களிலுள்ள வாக்களிப்பு நிலையங்களில் ஜனாதிபதி தேர்தலில் பயன்படுத்திய வாக்குப்பெட்டிகளை பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக வாக்குப் பெட்டிகளின் வாய் துளையை பெரிதாக்குவதா? அல்லது பெரிய பெட்டிகளை தயாரிப்பதா? என்பது தொடர்பில் தோதல்கள் ஆணையாளர் தலைமையில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

ஏழாவது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் திகாமடுல்ல, மட்டக்களப்பு மற்றும் கொழும்பு, களுத்துறை உள்ளிட்ட மாவட்டங்களிலேயே கூடுதலான அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன.

இவ்வாறான மாவட்டங்களிலுள்ள வாக்குச்சாவடிகளுக்கு வழங்கப்படுகின்ற பெட்டிகளின் துளைகளை பெரிதாக்குவதாயின் அவ்வாறான வாக்குச்சாடிகளுக்கு வழங்கப்படுகின்ற வாக்குப்பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். இல்லையேல் வாக்குச்சாவடிக்கு அண்மையில் மற்றுமொரு வாக்குச்சாவடியை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வாக்குச்சாவடிக்கு அண்மையில் மற்றுமொரு வாக்குச்சாவடியை நிறுவுவது என்பது செலவை அதிகரிக்கும் விடயம் என்பதனால் நிலைமையை கருத்தில் கொண்டு இந்த பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வொன்றை எட்டுவதற்கு திணைக்களம் தீர்மானித்துள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்தார். (2-6)

## அரச வைத்தியசாலைகளில் பற்றாக்குறையான மருந்துகள் பற்றிய தகவல்களை வழங்க விசேட பிரிவு

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் பற்றாக்குறையாகக் காணப்படும் மருந்து வகைகள் பற்றிய தகவல்களை தினமும் 24 மணித்தியாலமும் வழங்கக்கூடிய வகையில் அவசர விசேடப் பிரிவொன்றினை சுகாதார அமைச்சினுடாக ஆரம்பிக்கும் செயற்றிதிட்டமொன்றினை வெகு விரைவில் அமுல்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சின் பதில்செயலாளர் வைத்தியர் நிஹால் ஜயதிலக தெரிவித்தார்.

அரசாங்க வைத்தியசாலை செயற்பாட்டுக் குழுவுக்கு நோயாளிகள், பொதுமக்கள், வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து பற்றாக்குறை தொடர்பில் தகவல்களை தெரிவிக்க இது ஒரு நல்லதொரு சந்தர்ப்பமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் ஆராய்ந்து மருத்துவ விநியோகப் பிரிவு மற்றும் பிரதேச மருந்துவ களஞ்சியசாலைகள் மூலமாக குறிப்பிட்ட அரச வைத்தியசாலைகளுக்கு துரித கதியில் மருந்துப் பொருட்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச் செயற்பாட்டுக்குழுவுக்கு என பிரத்தியேக தொலைபேசி இலக்கமொன்றினை ஏற்படுத்துவதுடன் இதற்கான பொருத்தமான உயர்வு வைத்திய அதிகாரியொருவரும் நியமிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது ஆகும். (2-6)

## கண்டி மாவட்ட மு.கா. மாகாண சபை உறுப்பினர் சு.கட்சியில் இணைவு

(கொழும்பு)

லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய மாகாண சபை உறுப்பினர் மர்ஜான் மாஸ்டர் ஸ்ரீலங்கா சுதந்தீரக்கட்சியில் இணையவுள்ளார் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உயர்மட்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் மர்ஸான் மாஸ்டர் எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் போட்டியிடவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கண்டி மாவட்டத்துக்கான வேட்பாளராக ஐக்கிய தேசியக்கட்சியின் கீழ் போட்டியிடுவதற்கு ரவூப் ஹக்கீம் தனக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார்.எனினும் கடைசி நேரத்தில் ரவூப் ஹக்கீம் தன்னை ஏமாற்றிவிட்டார் என்று மர்ஜான் மாஸ்டர் குற்றம் சுமத்தினார்.

மலையக முஸ்லிம் காங்கிரஸ் மூலம் சுதந்திரக்கட்சியில் இணைந்துகொண்ட மர்ஜான் மாஸ்டர் அமைச்சர் பைஸர் முஸ்தபாவுக்கு ஆதரவாக செயற்படவுள்ளதாகவும் இணையத்தளத்துக்கு தெரிவித்துள்ளார். (2-6)

## மனித உரிமைகள் பாதுகாவலர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் உள்ளக இடம்பெயர்ந் தோருக்கான நிரந்தரத் தீர்விற்கும் தேசிய பாதுகாப்பிற்குமான செயற்றிட்டத்தின் அடிப்படையில் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான பயிற்சிநெறி திருகோணமலை பகுதியில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுடன் இணைந்து சேவையாற்றக்கூடியவராக இருப்பதுடன் சிறந்த மொழி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் இத்தகையோர் சமூகசேவை மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் ஆர்வமுடையோராக இருக்கவேண்டும். கல்விப் பொதுத்தராதர பத்திர வகுப்பில் பயின்றிருப் பதுடன் 20 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப் பட்டவராக இருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலவசமாக நடத்தப்படும் இந்தப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் திருகோணமலையில் உள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வலி தந்தாரை தோற்கடிப்போம்—நம் விதி வெல்ல வாக்களிப்போம்



இலங்கைத் தமிழரசுக் கட்சி

சிவஞானம் சிறீதரன்

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் M.Ed, B.A, PGDE, Sp.Tr (Ag) SLPS

# மனித உரிமைப் பேரவை மாநாட்டிற்காக சட்டமா அதிபர் ஜெனீவா பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஜெனீவாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

சட்டமா அதிபர் தலைமையிலான குழுவினர் ஜெனீவா சென்றுள்ளதாக மனித உரிமைகள் அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் 13ஆவது அமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை முதல்26ஆம் திகதிவரையில் நடைபெறவுள்ளது.

தேர்தல்களில் போட்டியிடுகின்ற காரணத்தினால் அமைச்சர் மஹிந்த சமரசிங்க பேரவையின் அமர்வுகளில் கலந்துகொள்ளவில்லை.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் மொஹான் பீரிஸ் விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் சில வேளைகளில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படக்கூடும் எனவும், அவற்றை சட்டமா அதிபர் தலைமையிலான குழுவினர் எதிர்நோக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துவோர் மீது விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் செயற்படும் தனிப்பட்ட நபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய ஜனாதிபதிக்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும் அவப்பெயர் ஏற்படும் வகையில் தகவல்களை வெளியிடும் தனிப்பட்ட நபர்களைக் கண்டுபிடிக்க பொலிஸார் விசேட குழு வொன்றை நியமித்துள்ளனர்.

குற்ற விசாரணைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர ஜெயசிங்க தலைமையில் இந்த விசேட குழு உருவாக்கப்பட்டுள்ளது.பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இந்த குழு உருவாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியையும் அவரது குடும்ப உறுப்பினர்களின் பெயரையும் பயன்படுத்தி சில மோசடிகள் இடம்பெற்று வருவதாகவும் அவை தொடர்பிலும் விசாரணை நடத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# இரண்டாவது ஆயுர்வேத வைத்தியசாலை அம்பாந்தோட்டையில் திறந்து வைப்பு

(கொழும்பு)

இலங்கையின் இரண்டாவது ஆயுர்வேத வைத்தியசாலை அம்பாந்தோட்டையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்த இந்த மருத்துவமனையை சிறிபோபுரவில் அண்மையில் திறந்து வைத்தார்.

அம்பாந்தோட்டையில் திறந்து வைக்கப்பட்டுள்ள ஆயுர்வேத வைத்தியசாலையில் மூன்று கட்டங்களாக அபிவிருத்தி செய்ய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இது சகல வசதிகளும் கொண்ட ஆராய்ச்சி நிலைய மாக மாற்றப்படும். அதன் பின்னர் இங்கு தாதியர் பயிற்சியும் இடம்பெறும் என்றும் இங்கு பயிற்சி பெற இதுவரையில் 3500 தாதியர் விண்ணப்பித்துள்ளனர். எனினும் ஆரம்பத்தில் 50 தாதியருக்கும் மூன்று வருடப் பயிற்சிகளை வழங்குவதற் கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# கடவுச்சீட்டு ஆவணங்களை கணனியில் பதியும் நடவடிக்கை

(கொழும்பு)

கடவுச் சீட்டுகளுடன் தொடர்புடைய சகல ஆவணங்களையும் கணனி மயப்படுத்த குடிவரவு,குடியகல்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி சுமார் 8 மில்லியன் ஆவணங்களைப் பதவி செய்ய உத்தேசித்துள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. முதற்கட்டத்தில் 1 கோடியே 5 இலட்சம் ஆவணங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் 12 வருடப் பழமையான ஆவணங்கள் தரவுகளாகப் பதிவுசெய்யப்படவுள்ளன.இதற்கான செலவாக 25 மில்லியன் ரூபாவை அரசு செலவிடவுள்ளது.

இவ்வாறு பதிவுசெய்யப்படும் ஆவணங்களை நீதிமன்ற நடவடிக்கைகள் உட்பட வேறு உத்தியோகபூர்வ தேவைகளின் போது குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் துரிதமாக வழங்கக் கூடியதாகவிருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# இந்தோனேஷியாவில் தமிழ் அகதிகள் உண்ணாவிரதத்தை கைவிட்டனர்

இந்தோனேஷியாவின் மெரேக் துறைமுகத்தில் உள்ள படகில் உள்ள இலங்கை அகதிகளின் பேச்சாளர் அலெக்ஸ் இந்தோனேஷிய அதிகாரிகளினால் கடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக இந்தோனேஷியாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு தற்போது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

குடிவரவு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு நாட்களுக்குள் ஐ.நா. அகதிகள் தொடர்பான அதிகாரிகளை குறித்த இடத்திற்கு அழைத்து வர இந்தோனேஷிய குடிவரவு அதிகாரிகள் இணங்கியுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்தே தாம் கடந்த 7 நாட்களாக நடத்தி வந்த உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-6)

# 1½ வயது மகனைக் கொன்ற தாய் விளக்கமறியலில்

## அனுராதபுரத்தில் சம்பவம்

(கொழும்பு)

தனது ஒன்றரை வயது மகனை கள்ளக் காதலனுடன் இணைந்து அடித்துக்கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட தாயையும் அவரது காதலனையும் எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தம்புத்தேகம பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் மல்பிரியந்தி மெண்டிஸ் என்ற குழந்தையின் தாயும் அவரது காதலனுமாவார். இரண்டு பிள்ளைகளின் தாயான இப்பெண் தனது கணவனை விட்டுத் தனியாக இருந்துள்ளார்.

சம்பவ தினம் இரவு தனது கள்ளக் காதலனுடன் இணைந்து தனது மகனை அடித்துக் கொன்று வீட்டின் பின்னால் குழியொன்றைத் தோண்டி புதைத்துள்ளார் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இது பற்றி நொச்சியாகம பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தொலைபேசி தகவலையடுத்து குறித்த பெண்ணின் மூத்தமகளான பத்து வயதுடைய சந்துனி லக்மாலியிடம் பொலிஸார் மேற் கொண்ட விசாரணையின் போதே உண்மை வெளிப்பட்டுள்ளது.

இதனையடுத்து வீட்டின் பின்புறம் புதைக்கப்பட்டிருந்த சிறுவனின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டதுடன் இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். அனுராதபுரம் பகுதிக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மோர்வின் கருணாரத்னவின் வழிகாட்டுதல்களுக்கு அமைய நொச்சியாகம பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ். குமாரசிங்க தலைமையிலான பொலிஸ் குழு சம்பவம் குறித்த விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (2-6)

# மதத்தலைவர்கள் அரசியலில் ஈடுபடுவதை சர்வமத பேரவை ஏற்றுக்கொள்ளாது

## தம்மாலங்கார தேரர்

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு, வறுமை போன்ற தேசியப் பிரச்சினைகளை நாட்டு மக்களும் அரசியல் தலைவர்களும் மறந்துவிட்டனர். தேர்தல்களின் போது வாக்குறுதிகளை வழங்குவது, தேர்தலின் பின்னர் வாக்குறுதிகளை மறப்பது போன்ற சுழற்சி முறைச் செயற்பாடுகளில் இருந்து நடுவுநிலையான மதத் தலைவர்கள் என்ற வகையில் நாம் பொறுப்புக் கூற வேண்டும் என சர்வமதப் பேரவையின் செயலாளர் நாயகம் இந்தேபானே தம்மா லங்காரதேரர் தெரிவித்தார்.

மதத்தலைவர்கள் அரசியலில் ஈடுபடுவதை சர்வமதப் பேரவை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. மதத்தலைவர்களை ஒரு கட்சியின் செயற்பாட்டாளராக கருத முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வமதப் பேரவையில் விஷேட செய்தியாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை நாராஹென்பிட்டியவில் அமைந்துள்ள அபயராம விகாரையில் நடைபெற்றது. இதன்போதே இந்தேபானே தம்மாலங்கார தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் வண.பிதா கிளீட்டஸ் சந்திர சிறி பெரேரா கூறுகையில்,

பொதுமக்களும் சகல அரச அதிகாரிகளும் நீதியான தேர்தல் ஒன்றையே எதிர்பார்க்கின்றனர்.

தேர்தல் சட்டங்களை மீறி, மோசடிகள் ஊடாக மக்களின் வாக்குரிமைகளை பறிப்பது பொதுமக்களுக்கு எதிரான பாரிய துரோகச் செயலாகும்.

வாக்குரிமையைப் பயன்படுத்தி தமது பிரதிநிதியை தெரிவுசெய்வதற்கு சகல பொதுமக்களுக்கும் உரிமையுண்டு. ஜனநாயக விரோதமாக செயற்பட்டு, வாக்குரிமைகளை மோசடிக்குள் தள்ளக்கூடாது. நீதியான தேர்தல் ஒன்றை நடத்த சகல தரப்பினரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

மேடைகளில் இருந்து வரும் அழுத்தங்கள் காரணமாக பொலிஸார் தேர்தல் சட்டங்களைப் பாதுகாப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் வாக்களிப்புக்கள் தேர்தல் முடிவுகள் வெளிவரும் வரை தேர்தல் சட்டங்களை அனைவரும் மதித்து செயற்பட வேண்டும். 1960 ஆம் ஆண்டிற்கு பிறகு இலங்கையில் வன்முறையற்ற தேர்தல் ஒன்றை நாம் காணவில்லை எனக் கூறினார். (2-6)

# சீனாவில் உயர்கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில் விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கை மாணவர்களுக்கு மக்கள் சீனக் குடியரசில் உயர் கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில் வழங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புத்தாய்வு மாணவர் நிலை மற்றும் பட்டப்பின் படிப்புக்கான தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்களுக்கே இச்சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. புத்தாய்வு மாணவர் நிலை புலமைப்பரிசிலுக்கு இலங்கையில் இருந்து 10 மாணவர்களும் பட்டப்பின் படிப்புக்காக 4 மாணவர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும் உயர்கல்வி அமைச்சின் www.mohe.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக செயலாளர் உயர் கல்வி அமைச்சு இல. 18, வார்ட்பிளேஸ் கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. (2-6)

# ஊவா கல்வியியற் கல்லூரியின் மாணவர்கள் 33 பேர் கைது

ஊவா கல்வியியற் கல்லூரியில் இறுதிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் களவு போனமை தொடர்பாக ஆசிரிய மாணவர் விடுதியை சேர்ந்த 33 மாணவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்விருந்ததாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வினாத்தாள்கள் காணாமல் போனதையடுத்து நேற்று முன்தினம் நாடெங்கும் நடைபெறவிருந்த கல்வியியற் கல்லூரிகளுக்கான பரீட்சைகள் இரத்துச் செய்யப்பட்டன. (2-6)

அகமுடையானை எமனுக்குக் கொடுத் தாலும்–கொடுப்பேன். சக்களத்திக்கு கொடுக்க மாட்டேன். –வங்காளம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கடவுளே! உள்ள உறவையும் தேர்தல் குழப்பிவிடுமோ!

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலும் நடக்கப்போகின்ற பொதுத் தேர்தலும் இலங்கையில் சிக்கலை ஏற்படுத்தியதோ இல்லையோ தமிழ் மக்களிடம் மிகமோசமான பிரிவை–ஒற்றுமை யீனத்தை ஏற்படுத்தி விட்டது.

தமிழ்மக்களுக்கு அரசியல் தலைமையில்லை என்பதையே இந்தப் பரிதாப நிலைமை காட்டி நிற்கின்றது.

அதன் பின்விளைவு தமிழ் இனம் நாதியற்ற இனமாக மாற்றம் அடையும் என்பதே நிஜம்.

இதில் இருந்து விடுபடுவற்கான ஏதுக்கள் எதனையும் காணவில்லை.

வன்னியில் நடந்த மிகப்பெரும் கொடூர யுத்தத்தின் போது இந்தியா நடந்து கொண்ட முறைமை ஈழத்தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இருந்த இரத்த உறவை கருக்கிவிட்டது.

தமிழகத்தின் முதல்வராக இருக்கின்ற கலைஞர் கருணாநிதி போட்ட திருகுதாளங்கள் ஒட்டு மொத்தத் தமிழகத்தின் மீதும் நம்பிக்கை யீனத்தை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ் உறவுகள் வன்னியில் துடித்த போது, தடுப்பு முகாம்களில் வதைபட்டபோது அதனை தடுத்து நிறுத்தாத தமிழகத்தை–இந்தியாவை எதிர்காலத்தில் நம்புவது எப்படி என்ற கேள்வி நிராகரிப்பிற்குரியதல்ல.

வன்னியில் நடந்த பேரழிவைக் கண்டு பொறுக்கமுடியாத தமிழகத்தின் சோதரன் முத்துக்குமாரன் தன்னுடலை தீக்கிரையாக்கிய நெஞ்சுருக்கும் நிகழ்வு உலகில் எங்கும் எப்போதும் நடந்ததில்லை.

வன்னிப்போரில் தமிழ் மக்கள் பட்டபாடு கண்டு வெந்து போன தமிழக மக்களை என்றுமே மறக்கமுடியாது.

அதேநேரம் மத்திய அரசின் முடிபை தமிழகத்தால் மாற்றமுடியாதென்னும் உண்மையையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

எதுவாயினும் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு வலியுறுத்தும் வலிமை தமிழகத்திடம் ஏற்படப்போவதில்லை என்பது உறுதி.

ஆக, புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எங்கள் உறவுகள் மட்டுமே எங்களுக்காக பரிதவிக்கின்றன.

ஆனால் அந்த பரிதவிப்பையும் நடைபெறப் போகும் பொதுத் தேர்தல் பாழாக்கிவிடுமோ என்ற பயம் ஏற்படத் தொடங்கி விட்டது.

என்ன செய்வது எங்களிடம் ஊறிப்போன பதவியாசை.

வன்னி அவலம் கண்டு மேற்குலகை இலங்கைபால் திசைதிருப்ப நடுவீதியில் நின்று போராடிய எங்கள் உடன்பிறப்புகளின் உறவையும் உரைத்துப் பார்க்கும் நாசத்தைச் செய்கிறது.

இது தமிழினத்தின அழிவை உறுதிசெய்வதாகவே அமையும்.

# 46 இலங்கை மீனவர்களை இந்தியா விடுவித்தது

(சென்னை)

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்களில் 46 பேர் விடுவிக் கப்பட்டுள்ளனர். மேலும் 140 பேரை விடுவிப் பது தொடர்பில் இந்திய அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

சென்னை மற்றும் விசாகப்பட்டிண அதி காரிகளுடன் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா ஏனையோரை விடுவிப்பது தொடர்பில் நேர டிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள் ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு மாத்திரம் இலங்கை மீனவர்கள் 700 பேரை இந்தியப் பாதுகாப்புப் படையினர் தடுத்து வைத்திருந் தனர். அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவருடன் மேற் கொண்ட பேச்சுவார்த்தைகளையடுத்து அம் மீனவர்களை கட்டங்கட்டமாக விடுவித்து இலங் கைக்கு அழைத்துவர முடிந்துள்ளது.

இறுதியாக கடந்த 24ஆம் திகதி 24 பேரும் 27ஆம் திகதி 22 பேரும் விடுவிக்கப் பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ள னர். விசாகப்பட்டணத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்த 28 இலங்கை மீனவர்களை அங் குள்ள நீதிமன்றம் விடுதலை செய்திருக் கிறது.

எனினும் அவர்களின் படகை மீட்பதற் கானவழக்கு அடுத்த ஏப்ரல் மாதத்தி லேயே விசார ணைக்கு எடுத் துக்கொள்ளப்பட வுள்ளது. இதனால் தமது படகையும் மீட்டெடுத்துக் கொண்டே வரு வதற்காக 28 மீன வர்களும் அங்கு தங்கியுள்ளனர்.

இவர்கள் அவ சரமாக இலங் கைக்கு வரவிரும் பினால் அவர் களை விமானம் மூலம் அழைத்து வரு வதற்கான நடவடிக் கைகளை அமைச்சு மேற் கொள் ளும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-6)

## போலி ஆவணங்களை சமர்ப்பித்து கடவுச் சீட்டுக்களை பெற முயற்சி

### தினமும் நடைபெறுவதாக தகவல்

(கொழும்பு)

கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு போலியான பிறப்பத்தாட்சிப் பத்திரங்கள் மற்றும் போலி அடையாள அட்டைகளை தினமும் கையளிப்பது தொடர்பான சம்பவங்கள் தமது திணைக்களத்துக்கு அறியக் கிடைப்பதாக குடிவரவு மற்றும் குடியகல்வு நிர்வாக அதிகாரி ஜனரல் பீ.பி. அபேகோன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கடவுச்சீட்டினை பெற்றுக்கொள்ளும் முகமாக தினமொன்றுக்கு சுமார் 2 ஆயிரத்து 500 முதல் 3 ஆயிரம் வரையிலான விண்ணப்பங்கள் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கின்றன.

இந்த விண்ணப்பங்களுடன் இணைக்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் போன்றவை 3 இடங்களில் விசேட விசாரணைக்குட்படுத்தப்பட்டே மேற்படி போலி விண்ணப்பங்களை இனங்காண முடிந்துள்ளது.

குறித்த போலி ஆவணங்களை இணைத்து அனுப்பும் விண்ணப்பதாரர்களை உடனடியாகவே கைது செய்வதற்கென விசேட பொலிஸ் குழுவை நியமித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (2-6)

## பொன்சேகா விடுதலை முயற்சியை ஐ.தே.கட்சி கைவிடாது

### தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

சரத் பொன்சேவை விடுதலை செய்யும் முயற்சிகளை ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் கைவிடாது என கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலில் இதற்கமைய வெவ்வேறு கட்களில் போட்டியிட்ட போதிலும் ஜெனரல் பொன்சேகாவை விடுதலை செய்யும் முயற்சிகள் தொடரும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருணாகல் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டினால் சில மணித்தியாலங்களில் ஜெனரல் பொன்சேகா விடுதலை செய்யப்படுவார் என அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## விமானப்படையினரின் சர்வதேச பாலர் பாடசாலை

### ஹிங்குராகொடவில் திறந்து வைப்பு

(கொழும்பு)

ஹிங்குராகொட ஸ்ரீலங்கா விமானப்படைத் தளத்தில் சர்வதேச பாலர் பாடசாலையொன்றை ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்தார்.

ஹிங்குராகொட விமானப்படைத் தளபதி டி.கெ.வனிக சூரிய மற்றும் சேவா வனிதா பிரிவின் தலைவி நெலுன் குணதிலக ஆகியோரின் முயற்சியால் இப் பாலர் பாடசாலை நிர்மாணிக்கப்பட்டது.

விமானப்படையினருக்குச் சொந்தமான இச்சர்வதேச பாலர் பாடசாலை மூலம் சர்வதேச தரத்துக்கு அமைவான கற்கை நெறிகளை அனைத்து சிறார்களுக்கும் வழங்கவுள்ளதாக விமானப்படை தெரிவித்துள்ளது. (2-6)

## அம்பாந்தோட்டை துறைமுகத்தில் வரி அறவிடப்படமாட்டாது

### துறைமுக அதிகாரசபை அறிவிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகம் வரி அறவிடப்படாத சுதந்திரத் துறைமுகமாகச் செயற்படவுள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபைத் தலைவர் கலாநிதி பிரியந்த பி. விக்கிரம தெரிவித்தார்.

இத்துறைமுகத்தின் சரக்கு ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள் இவ்வருட இறுதியில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு எவ்வித வரிகளும் அறவிடப்பட மாட்டாது என்றும் அவர் கூறினார்.

இத்துறைமுகத்திற்கு வரும் வெளிநாட்டு கப்பல்கள் மூலம் துறைமுக வருமானத்தில் 10 சதவீதத்தை பெற்றுக் கொள்ளவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இத் துறைமுகத்தின் முதல் கட்ட அமைப்புப் பணிகள் திட்டமிடப்பட்ட காலத்திற்கு முன்பாக ஒக்டோபர் இறுதி யில் முடிவடையும் எனவும் இதன் மூலம் 5 ஆயிரம் பேருக்கு நேரடித் தொழில் வாய்ப்பும் 50ஆயிரம் பேருக்கு மறைமுக தொழில் வாய்ப்பும் கிடைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# சத்தியமும் தர்மமுமே இறைவன்



உலகம் நன்றே உய்யவேண்டுமானால் சத்தியமும் தர்மமும் ஒவ்வொரு மனிதனாலும் சரிவரக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சத்தியமும் தர்மமும் மனிதரிடம் சரிந்துபோகும் வேளை உலக ஷேமம் நாசமாகும். புராண காலத்திலிருந்தே வேதங்களும் உப நிடதங்களும் சத்தியத்தை அறியுங்கள், தர்மத்தைக் கடைப்பிடியுங்கள் என்று உபதேசிக்கின்றன. சத்தியமும் தர்மமும் மனித வாழ்க்கையை முன்னேற்றும் ஆதாரபடிகள் என முன்னோர்கள் மொழிந்துள்ளனர்.

சத்தியத்தை விட உயர்ந்த தர்மம் எதுவும் இல்லை. சத்தியமே கடவுள் என பாபா அருள்கின்றார். இதை மறந்து மாற்று வழிகளில் இறைவனை அடைய முயல்வது எமது அறியாமையாகும். ஓர் முறை பூமாதேவி பகவான் விஷ்ணுவிடம் வந்து பகவானே என்னால் எண்ணற்ற உடல்களைச் சுமக்க முடியும். ஆனால் சத்தியம் தவறி நடப்பவர்களின் பாரத்தைச் சுமக்க முடியாது என்று கூறினார்.

இன்றைய காலத்தில் சத்தியத்தையும் தர்மத்தையும் கடைப்பிடிக்க தவறிவிட்டதால் மனிதர்களிடையே ஒற்றுமை குன்றி குரோதங்கள் வளர்ந்து பல துன்பங்களுக்கு உள்ளாகின்றனர் மனிதர்கள் என்கிறார் பாபா.

சத்தியம் பேசுவதற்கு பாபா நல்லதோர் விளக்கம் தருகின்றார். பிறரை துன்புறுத்தாமலும் பிறர் நலனை இயன்றளவு கருதி அன்புடன் பேசப்படும் வாசகங்களே சத்தியம். எதைப் பேசினாலும் பிறரது கோபத்தை தூண்டுவதாகவோ பிறர் மனதை வருத்தக் கூடியதாகவோ இருக்கக் கூடாது. சிந்தனை, வாக்கு, செயல் மூன்றிலும் சத்தியம் பிரதிபலிக்க வேண்டும். அதைத்தான் திரிகரண சுத்தி என்கின்றோம்.

பாபா அடிக்கடி அருளுவது ஒரு நாட்டுக்கென்றோ, ஓர் இனத்துக்கென்றோ தர்மங்கள் வகைப்படாது எல்லோருக்கும். உலகனைத்தும் ஒரு தர்மம் தான் ஆட்சி புரியவேண்டும்.

ஜெய்சாயிராம் யாதவன்

# கணனி பராமரிப்பு

நம் வீதிகளில் ஓடும் பெரிய லொறிகளைக் கவனித்தால்,அதன் நீளமான பற்றரி பெட்டிகளில் ***தினமும் என்னைக் கவனி*** என்று எழுதப்பட்டிருக்கும். அதில் உள்ள டிஸ்டில்ட் வோட்டர் மாற்றுவது, சேர்ந்திருக்கும் தூசு மற்றும் துருவினை நீக்குவது போன்ற வேலைகளை அன்றாடம் கவனிக்க வேண்டும். அதுபோல் லொறி மட்டுமன்றி ஏனைய வாகனம் ஒவ்வொன்றையும் அவற்றின் ஒவ்வொரு பகுதியையும் குறிப்பிட்ட கால அவகாசத்தில் பாரமரித்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையேல் அது ஓடாத மோட்டர் வாகனமாக மாறிவிடும்.

அதேபோல் கணனியில் சில விடயங்களைக் குறிப்பிட்ட கால அவகாசத்தில் மேற்கொள்ள வேண்டும். அவற்றைப் பார்க்கலாமா!

✦ தினந்தோறும் ரெம்பரரி பைல்களை அறவே நீக்க வேண்டும். இங்கு அறவே நீக்க வேண்டும் என்று சொல்வது அவை ரீசைக்கிள் பின் என்னும் போல்டரில் கூட இருக்கக் கூடாது என்பதுதான். இதற்கு சி கிளீனர் போன்ற இலவச புரோகிராம்கள் நமக்கு உதவுகின்றன.

✦ இன்டர்நெட் இணைப்பு பெற்று இணைய நெட்வேர்க்கில் உங்கள் கணனி இணைந்து விட்டதா! உடனே உங்கள் அண்டி வைரஸ் தொகுப்பை அப்டேட் செய்திடுங்கள். இதனைச் சில நாட்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளலாம் என்றாலும் தினந்தோறும் நீங்கள் இன்டர்நெட் நெட்வேர்க்கில் பணியாற்றுபவர் என்றால் தினந்தோறும் கூட அப்டேட் செய்திடலாமே இதற்கென ஓரிரு நிமிடங்கள் தானே ஆகும்.




✦ கணனியில் உள்ள ஹார்ட் டிஸ்க்கினை டிபிராக் (Defrag) செய்வது மிக அவசியம். இதற்கான கால அவகாசம் நீங்கள் புரோகிராம்களை இன்ஸ்டோல் மற்றும் அன் இன்ஸ்டோல் செய்வதனைப் பொறுத்துள்ளது. இருப்பினும் 10 அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை மேற்கொள்வது நல்லது.

✦ சிகிளீனர் போல கிளீன் மைடிஸ்க் புரோகிராம்கள் இணையத்தில் நிறைய கிடைக்கின்றன. இவற்றை டவுண்லோட் செய்து பயன்படுத்தலாம். சிலர் வாரத்தில் மூன்று முறை இதனைப் பயன்படுத்துவார்கள். ரெம்பரரி பைல்களை நீக் குகையில் ரீசைக்கிள்பின் மற்றும் இன்டர்நெட் ரெம்பரரி பைல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளனவா என்று பார்க்கவும்.

✦ இன்னொரு வழியும் உள்ளது. Start மெனு சென்று அங்கு கிடைக்கும் ரன் பொக்ஸ் (Start>Run) செல்லுங்கள். %temp% என டைப் செய்து ஓகே கிளிக் செய்திடுங்கள். உடனே தற்காலிக பைல்கள் உள்ள போல்டர்கள் அனைத்தும் கிடைக்கும் வேறு எந்தத் தயக்கமுமின்றி அனைத்தும் *டெலீட்* செய்திடுங்கள்.

ஒரு சில பைல்கள் அல்லது போல்டர்கள் அழிக்கப்பட முடியவில்லை என்று செய்திகள் வரலாம். எவ்வளவு அழிக்க முடியுமோ அவ்வளவையும் அழித்திடுங்கள்.

✦ விண்டோஸ்தரும் அட்/ரிமூவ் புரோகிராம் மூலம் புரோகிராம்களை அன் இன்ஸ்டால் செய்தால் அது அந்த புரோகிராம் சார்ந்த பைல்களை முழுமையாக நீக்குவதில்லை. எனவே இதற்கென உள்ள சில புரோகிராம்களை டவுண்லோட் செய்து பயன்படுத்தவும். http://www.revouninstaller.com/revouninstaller free download.html என்ற தளத்தில் இந்த புரோகிராம் ஒன்று கிடைக்கிறது.

✦ நீங்கள் வைத்து அவ்வப்போது அப்டேட் செய்திடும் அன்டி வைரஸ் புரோகிராம் சில மால்வேர்கள் மற்றும் ஸ்பை வேர்களை நீக்கக் கூடிய திறன் இல்லாமல் இருக்கலாம். எனவே அவற்றை நீக்குவதற்கென உருவாக்கப்பட்ட புரோகிராம்களை தினந்தோறும் இயக்கவும்.

✦ கணனி கிளீன் செய்வதைப் போல அதில் உள்ள டேட்டாவினைப் பாதுகாப்பதற்கும் சில நடவடிக்கைகளை குறிப்பிட்ட கால அவகாசத்தில் மேற்கொள்ள வேண்டும். எனவே தினந்தோறும் வேலை முடித்தவுடன் நாம் உருவாக்கிய மற்றும் திருத்திய பைல்கள் அனைத்தையும் பக்அப் எடுத்து வைத்துக் கொள்வது நல்லது.

தினந்தோறும் பக்அப் செய்தாலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை உங்கள் ஹார்ட் டிஸ்க் முழுவதையும் ஒரு இமேஜாக உருவாக்கி பக் டிஸ்க்கில் வைப்பது நல்லது. இந்த இமேஜ் இருந்தால் உங்கள் ஹார்ட் டிஸ்க் கிராஷ் ஆகி உங்களுக்கு உதவ முடியாத நிலையில் இந்த இமேஜ் விண்டோஸ் இயக்கம் முதல் உருவாக்கிய பைல்கள் வரை அனைத்தும் தரும்.

✦ ரெஜிஸ்ட்ரி யை கிளீன் செய்திடுங்கள் என்று சில கட்டுரைகளில் படிக்கலாம். கணனிகளுக்குப் புதியவரா நீங்கள்? அப்படியானால் இந்த வேலையை மேற்கொள்ள வேண்டாம். எனது கண்னி கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்தவித ரெஜிஸ்ட்ரி கிளீனிங் செய்திடாமல் நன்றாக இயங்கிக் கொண்டு தான் உள்ளது.

# கூகுள் BUZZ சில டிப்ஸ்கள்

வெகு சுவாரஸ்யமாக இருப்பதால் ஜிமெயில் பயன்படுத்தி வருகிற பலரும் **BUZZ** பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். லேட்டஸ்ட் சோஷியல் தளமாக இந்த **BUZZ**முயற்சி பேசப்படுகிறது. உங்கள் டிஜிட்டல் வாழ்க்கையின் முக்கிய அங்கமாக இது நிச்சயம் மாறப்போகிறது. இதனைப் பயன்படுத்தத் தொடங்கி புதிய அனுபவம் பெற்று வரும் உங்களை, அடுத்த லெவலுக்குக் கொண்டு செல்ல கீழ்க்காணும் டிப்ஸ்கள் தரப்படுகின்றன.

இதன் மூலம் உங்களுடைய **BUZZ** களை இன்னும் எளிதாக உங்களால் கையாள முடியும்.

**ஜிமெயில்BUZZகள் தனி இடம்**

**BUZZ** பயன்படுத்தும் சிலர் **BUZZ** இன்பொக்ஸில் இருப்பது,அதன் முக்கியத்துவத்தினைக் குறைக்கிறது. மேலும் ஜிமெயில் இன்பொக்ஸில் மற்ற மெயில்களுடன் **BUZZ** கலந்திருப்பது, இன்பொக்ஸ் தன்மையையும் மாற்றுகிறது என்று கூறினார்கள். அது ஓரளவிற்கு உண்மை என்றே பட்டது. மெயில் மற்றும் **BUZZ** குணாதிசயங்கள் வெவ்வேறாக இருக்கும் போது ஏன் இரண்டும் கலந்து வரவேண்டும் என்ற எண்ணத்துடன் ஜிமெயில் கட்டமைப்பில் தேடிய போது இதற்கு ஒரு வழி கிடைத்தது.

ஜிமெயில் இன்பொக்ஸில் பல பிரிவுகளை உண்டாக்கும் வசதி உள்ளது. இந்த பிரிவுகளை உண்டாக்கி நாம் மெயில்களை அனுப்பியவர்கள் வாரியாக, தன்மை வாரியாகப் பிரித்து வைக்கலாம். இதைப் பார்த்த பின் **BUZZ** களுக்கென இரண்டு பிரிவுகளை உண்டாக்கலாம் என்று தோன்றியது. ஒன்று நீங்கள் அமைக்கும்**BUZZ** களுக்காக; மற்றொன்று பிறரிடம் இருந்து கிடைக்கும் **BUZZ** களுக்காக. இதனை எப்படி உருவாக்குவது என்று பார்க்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட மெயில் பொக்ஸ்களை எப்படி அமைப்பது என்றும் அறிந்து கொள்ளலாம்.

✦ முதலில் ஜிமெயில் லேப்ஸ் (**Gmail labs**) திறந்து கொள்ளுங்கள். வலது மேல் மூலையில் பச்சை நிறத்தில் சிறிய பீக்கர் உருவம் ஒன்று இருக்கிறதா? அதுதான் லேப்ஸ் தரும் உருவமாகும். கிடைக்கும் பிரிவில் **Multiple inboxes** என்று இருப்பதனை இயக்கவும். பின் அந்தப் பக்கத்தின் கீழாகச் சென்று ***save changes*** என்று இருப்பதில் அழுத்தவும்.

✦ மீண்டும் இன்பொக்ஸ் (inbox) வந்து அதில் லேப்ஸ் ஐகனுக்கு அருகே உள்ள Settings என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு ***Multiple Inboxes*** என்று இருப்பதைப் பார்க்கலாம்.



✦ இதில் Pane O என்று இருப்பதில் is: ***My Buzzes*** என டைப் செய்திடவும். பின் Panel title ***(optional)*** என்று இருக்கும் இடத்தில் ***MyBuzzes*** என டைப் செய்திடவும்.

பின் ***Pane-1*** என்று இருப்பதில் ***My Buzzes*** என டைப் செய்திடவும். பின் *Panel title (optional)* என்று இருக்கும் இடத்தில் *Buzzes* என டைப் செய்திடவும்.

✦ இனி ஒவ்வொரு பொக்ஸிலும் கொன்வர்சேஷன் (மெயில் மெசேஜ்) எத்தனை இருக்க வேண்டும் எனத் தரவும். மொத்த இன்பொக்ஸில் இந்த பிரிவு எங்கு இருக்க வேண்டும் என்பதனையும் காட்டவும்.

✦ அடுத்த *Save changes* என்பதனை அழுத்தவும். இனி உங்களுக்கு வரும் Buzzகள் இன்பொக்ஸின் தனிப்பிரிவில் வருவதனைப் பார்க்கலாம். இவை உங்களுடைய பொதுவான இன்பொக்ஸை மறிக்காமல் இருப்பதனையும் காணலாம்.

**லேபிள்கள்**

ஜிமெயில் இன்பொக்ஸில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகள் அமைப்பதாக இருந்தால் மட்டுமே இது உங்களுக்குப் பயன்படும். (ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகள் எப்படி அமைப்பது என்பது குறித்து மேலே விளக்கக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன) இங்கு என்ன என்ன லேபிள்கள் உருவாக்க வேண்டும் என்று பார்க்கலாம்.

MyBuzzes மற்றும் Buzzes என இரண்டு லேபிள்கள் உருவாக்கவும். இவற்றை உருவாக்க உங்கள் ஜிமெயில் இன்பொக்ஸ் மேலாக Labels என்ற பட்டனில் கிளிக் செய்திடவும். பின் Manage Labels என்பதைத் தேர்ந்தெடுக்கவும். பின் கீழாகச் சென்று டெக்ஸ்ட் என்டர் செய்வதற்கான பொக்ஸ் ஒன்று Create a New Label என்று இருப்பதைக் காணவும். இங்கு ஒன்றன் பின் ஒன்றாக மேலே சொன்ன இரு லேபிள்களையும் டைப் செய்திடவும். பின் Create என்பதில் கிளிக் செய்திடவும். இனி உங்கள் இன்பொக்ஸ்க்குச் செல்லவும். இனி அடுத்த இரண்டாம் கட்ட நடவடிக்கையில் இறங்கலாம். ஜிமெயில் இன்பொக்ஸில் Buzz வேண்டாமா? மூன்று வகையான Buzzகள் உங்கள் ஜிமெயில் இன்பொக்ஸ்க்குத் தானாக அனுப்பப்படும்.

(தொடரும்)




# டிஸ்க்கின் இடஅளவு

WIKIMEDIA

WIKIPEDIA
The Free Encyclopedia

## இந்தவார டவுண்லோட்

உங்கள் கணனியின் ஹார்ட் டிஸ்க்கின் பிரிவுகளில் எவ்வளவு இடம் இன்னும் மீதம் உள்ளது என்று பார்க்க ஒவ்வொரு முறையும் விண்டோஸ் எக்ஸ்புளோரர் சென்று அல்லது மை கொம்ப்யூட்டர் சென்று டிரைவ் எழுத்தில் கிளிக் செய்து பார்க்கிறீர்களா? அல்லது டிரைவ் எழுத்தில் ரைட் கிளிக் செய்து ப்ராப்பர்டீஸ் தேர்ந்தெடுத்துப் பார்க்கிறீர்களா?

இந்தசுற்றிவளைத்துப்பார்க்கும்வேலையை ஒரு சிறிய புரோகிராம் எளிதாக மேற்கொண்டு எப்போதும் உங்கள் டிரைவின் இட அளவை கண்முன்னே காட்டுகிறது.

ஒரு சிறிய புரோகிராம் இந்த வகையில் உங்களுக்கு உதவும். இதனை டவுண்லோட் செய்து இன்ஸ்டோல் செய்து வைத்தால் உங்கள் கணனியின் சிஸ்டம் டிரேயில் டிஸ்க்கின் டிரைவ்களில் உள்ள மிதமான இடத்தைக் காட்டும்.

இதனைப் பெற நீங்கள் செல்ல வேண்டிய தள முகவரி: http:/traydiskfree sourceforge.net/). ஒரு சின்ன எச்சரிக்கை இந்த புரோகிராம் விண்டோஸ் விஸ்டாவில் செயல்படாது. ஆனால் விண்டோஸ் 2000, எக்ஸ்பி போன்ற மற்ற 32 பிட் ஒப்பரேட்டிங் சிஸ்டங்களில் செயல்படும்.

(தொடரும்)

# முதலாவது ஒருநாள் போட்டியில் ஆஸி.அணியை வீழ்த்தியது நியூசிலாந்து



ரெய்லர், ஸ்ரைரிஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் முதலாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 2விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது. நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 இரு பது-20, 5ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றிபெற்றது. இந் நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நேற்று நேபியரில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மைக்கல் ஹசி, வோட்ஷனின் அதிரடித்துடுப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்களில் 8விக்கெட்டுக்களையிழந்து 275 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கல் ஹசி 59பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 59 ஓட்டங்களையும், ஷேன் வோட்ஷன் 31 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 45ஓட்டங்களையும் அணித்தலைவர் பொன்டிங் 44ஓட்டங்களையும், வைற், ஹோப்ஸ் ஆகியோர் தலா 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தௌப்பி 3விக்கெட்டுக்களையும், ஷேன் வொன்ட் 2விக்கெட்டுக்களையும், சௌத்தி ஓரம் மற்றும் பிராங்ஸின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ரெய்லர், ஸ்ரைரிஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 49.2ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 281ஓட்டங்களைக் குவித்து 2விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் ரோஸ் ரெய்லர் 71பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட)70 ஓட்டங்களையும், ஸ்கொட் ஸ்ரைரிஸ் ஆட்டமிழக்காமல் 34பந்துகளில் (7பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 49ஓட்டங்களையும். மைக்குலம் 45, இங்ராம் 40ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் பொல்லிங்கர் 2விக்கெட்டுக்களையும், ஹரிஸ், ஜோன்ஷன், ஹோப்ஸ், வோட்ஷன் மற்றும் ஹயூரிச் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் போட்டியில் நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு வழியமைத்த ரோஸ் ரெய்லர் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் 5போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலைபெற்றது.

இதேவேளை பாகிஸ்தான்(5 போட்டிகள்), மேற்கிந்தியத்தீவுகள் (3போட்டிகள்) அணிகளுடனான தொடர்களில் தொடர்ச்சியாக 8 போட்டிகளில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணியின் வெற்றிநடைக்கு நியூசிலாந்து அணி தடைபோட்டது.

# மோர்கன் சிறப்பான சதம்; தொடர் இங்கிலாந்து வசம்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி இரண்டு விக்கெட்டுக்களினால் வெற்றியீட்டியது.

பங்களாதேஷின் மிர்பூரில் உள்ள பங்களா தேசிய மைதானத்தில் நேற்று முன்தினம் பகலிரவு ஆட்டமாக இந்தப் போட்டி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 50ஓவர்களில் 6விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் முஸ்பிகுர் ரஹ்மான் 76ஓட்டங்களையும், இம்ருல் கயிஸ் 63ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் இங்கிலாந்து அணியின் சார்பில் ரிம் பென்சன் மூன்று விக்கெட்டுக்களையும் கிரஹம் ஸ்வான் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 261ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 48.5ஓவர்களில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. இங்கிலாந்து அணியின் முக்கிய வீரர்கள் பலர் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றதனால் தோல்வியடையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

எனினும் இயோன் மோர்கனின் அபார துடுப்பாட்டத் திறமையினால் இங்கிலாந்து வெற்றியீட்டியது. இங்கிலாந்து அணியின் சார்பில் துடுப்பாட்டத்தில் இயோன் மோர்கன் 104பந்துகளில் ஆட்டமிழக்காது 110ஓட்டங்களையும், அலிஸ்டயா குக் 60ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் அப்துர் ரசாக் மற்றும் சகிபுல் ஹசன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

சிறந்த துடுப்பாட்டத் திறமையின் மூலம் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்ற இயோன் மோர்கன் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் 2:0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி தொடரைத் தனதாக்கியது.




நெஸ்டமோல்ட்
மினி மரதன் ஓட்டம்-2010

காலம் : 06.03.2010 (சனிக்கிழமை)
இடம் : யாழ். துரையப்பா விளையாட்டரங்கு
நேரம் : காலை 6.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்-நெஸ்ரில் நிறுவனம்


# கிரிக்கெட் வாழ்க்கை தூய்மையானது; சூதாட்டத்தில் நான் ஈடுபடவில்லை

## பாகிஸ்தான் வீரர் அக்மல் வேதனை

(கராச்சி)

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக சமீபத்தில் நடந்த ஒருநாள் போட்டித் தொடரில் பாகிஸ்தான் அணி மிகவும் மோசமாக தோற்றது. இந்த தோல்விக்கு சூதாட்டம்தான் காரணம் என்று கூறப்பட்டது.

பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மல், வேகப்பந்துவீச்சாளர் ரானா நவீட் ஆகியோருக்கு போட்டிச் சூதாட்டத்துடன் தொடர்பு இருப்பதாக பரபரப்பான தகவல் வெளியானது.

இதன் காரணமாகத்தான் அவர்கள் இங்கிலாந்துக்கு எதிராக சமீபத்தில் நடந்த இருபது-20 கிரிக்கெட் தொடரில் சேர்க்கப்படவில்லை. இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணை நடத்தி வருகிறது.

இதற்கிடையே சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை கம்ரன் அக்மல் மறுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

சூதாட்டத்தில் ஈடுபட்டதாக என் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நான் சூதாட்டத்தில் ஈடுபடவில்லை. எனக்கு எதிரான குற்றச்சாட்டு எல்லாமே ஆதாரமற்றது. முழுக்க தவறானது. புகழை கெடுக்கும் வகையில் எனது பெயர் வெளியிடப்பட்டுள்ளது.

எனது கிரிக்கெட் வாழ்க்கை தூய்மையானது. எப்போதுமே நான் நேர்மையாகத்தான் விளையாடி வருகிறேன்.

இவ்வாறு அக்மல் கூறியுள்ளார்,

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 32ஓட்டங்களினால் தோல்வியடைந்தது. இந்த ஆட்டத்தில் அக்மல் 3 பிடிகளையும், ஒரு ஸ்டம்பிங்கையும் தவறவிட்டார். இது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கிடையே அவுஸ்திரேலியா தொடரில் மோசமாக ஆடியது மற்றும் நடந்து கொண்ட விதத்திற்காக அக்மல், அப்ரிடி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று 5பேர் கொண்ட குழு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் பரிந்துரை செய்துள்ளது.

# தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை...

சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

இலங்கை அரசாங்கம் நாடுபூராக சிங்களதேசவாதத்தை உருவாக்கி வருகின்றது. தற்போது மன்னார் முள்ளிக்குளம் பிரதேசத்தில் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்து இடம் பெயர்ந்த நிலையில் அங்கு கடற்படையினருக்காக ஆயிரம் வீடுகளையும் முகாம்களையும் கட்டுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

இதேபோன்றுதான் கிளிநெச்சி, முல்லைத்தீவுப் பிரதேசங்களில் துரிதமாக இச்செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மீள் குடியேற்றுவதாக கூறி இவ்வாறான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடுவது முரணான விடயம் ஆகும்.

இத்தகைய நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள்சபை, சர்வதேச சமூகம் ஆகிய இணைந்து உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.

இதேவேளையில் எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு இலங்கை அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள், ஆதரவாளர்கள் மற்றும் சிங்கள உல்லாசப்பயணிகள் ஆகியோருக்கு தனிநபருக்கு 15ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கி இலங்கை இராணுவத்தால் மீட்டெடுக்கப்பட்ட யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களை பார்வையிட்டு வருமாறு அனுப்பி வைக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அலரிமாளிகையில் அன்னதானமும் வழங்கியது.

தேர்தல் காலங்களில் இவ்வாறான அரசியல் நாடகங்களை சிங்கள மக்கள் மீது அரங்கேற்றுவதன் ஊடாக சிங்கள மக்கள் ஆளும் கட்சிக்கு வாக்களிப்பார்கள் என அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.

உல்லாசப் பயணம் என்ற ரீதியான சிங்கள மக்களின் யாழ்ப்பாணம் நோக்கியதான படையெடுப்பால் சுகாதாரச் சீர்கேடுகள், போக்குவரத்து நெரிசல்கள், இடநெருக்கடிகள் என்பன பாரிய பிரச்சினையாக தலைவிரித்தாடுகின்றது.

இவற்றை யாழ்.மாநகரசபையால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

### அரசியல் இலாபத்துக்காக அதிக செலவு செய்யும் அரசு

அரசியல் இலாபத்திற்காக சிங்கள மக்களிற்கு செலவுசெய்கின்ற அரசாங்கம் இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ள மக்களுக்கு இப்பணங்களை பயன்படுத்தியிருந்தால் மக்கள் ஓரளவு பயனடைந்திருப்பார்கள்.

### தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி

இந்நிலையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தமிழ் தேசியத்துக்கான மக்கள் முன்னணியை தற்போது உருவாக்கியுள்ளது. இவ் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசம், தேசியம், இறையாண்மை, சுயநிர்ணய உரிமை இவை எல்லாவற்றையும் கைவிட்டுச் செல்வதாக குற்றம்சாட்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஐ.நா.சபையின் நெறிமுறை ஊடாக உருவாக்கப்பட்ட மனித குழுமங்களுக்கு இருக்கக் கூடிய அதிகாரங்களின் அடிப்படையில் இலங்கை தமிழ் மக்களுக்கு முழுமையான சுயநிர்ணய உரிமை உள்ளது.

அந்த சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை தயாரித்துள்ளது.

1978ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானத்தில் இருந்தும், கூட்டணியூடாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடாகவும், பல்வேறுபட்ட இயக்கங்கள் ஊடாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாக இது நிலை நிறுத்தப்பட்டு வந்திருக்கின்றது என்பதை தெளிவாகக் கூறிக் கொள்கிறோம்.

தேசம், தேசியம் பற்றி கூறுபவர்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கேள்வி கேட்கின்றது. நீங்கள் போட்டியிடும் யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்கள் மாத்திரம் தான் தமிழ் மக்களின் உடைய தேசமா? நீங்கள் ஏன் வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் போட்டியிடவில்லை.

யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் ஒருசில நபர்களை தோற்கடிப்பதுதான் உங்களது தேசிய சிந்தனையா?

திருகோணமலையில் ஒருவர் மட்டும் தெரிவு செய்யப்படக்கூடிய நிலையில் நீங்கள் போட்டியிடக் கூடியதானது வெறும் சம்பந்தனை மாத்திரம் அல்ல ஒட்டுமொத்தமாக தேசியத்தையும் தோற்கடிப்பதற்காகவா?

தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதுதான் நீங்கள் கூறுகின்ற தேசியமா? திருகோணமலை மாவட்டத்தின் பிரதிநிதித்துவம் பறிபோகாமல் இருப்பதற்காக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பாட்டனார் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சிக்கு எதிராக போட்டியிடாமல் தவிர்த்துக் கொண்டால் இதனைச் கூட விளங்கிக் கொள்ளாமல் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு கஜேந்திரகுமார் போட்டியிடுவது ஆனது ஒட்டுமொத்த தேசியத்தை அழிப்பதற்குச் சமனாகும்.


### 100க்கும் மேற்பட்ட சுயேட்சைக் குழுக்கள்

வடக்குக் கிழக்கில் என்றும் இல்லாத வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பல வீனப்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு காரணத்திற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுயேட்சைக் குழுக்களை அரசாங்கம் தேர்தல் களத்தில் இறக்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் முழுமையாக ஒழிக்கப்பட்டுவிட்டனர். தமிழ் மக்களுக்கான கோரிக்கைகள் எதுவும் முன்வைக்கப்படமாட்டாது என்ற நோக்கத்திற்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சின்னாபின்னமாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுகின்றது என சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார். (ச-7)







சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் மாணவிகளின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிறைவேற்று அதிகாரி சி.குகராஜன் உரை நிகழ்த்துவதையும் வெற்றிபெற்ற இல்லத்திற்கான கேடயத்தினை திருமதி உசா குகராஜன் வழங்குவதையும் படங்களில்காணலாம். படங்கள்:-சுரேஷ்

# உலக வங்கியின் உதவியுடன் வடக்கின் துரித மீட்சித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

உலகவங்கியின்நிதிஉதவியுடன்தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்டத்துறை உட்கட்டுமான அபிவிருத்தி அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் உயர்பாதுகாப்பு வலயத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள குடும்பங்களிற்கு உதவவுள்ளதாக அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

முதலாகத்திட்டத்தின்மூலம் 8 பிரதேசசெயலர் பிரிவுகளைச் சேர்ந்த 34 கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியமர்த்தப்படும் 2 ஆயிரத்து 363 குடும்பங்கள் பயனடையவுள்ளன.

இத்திட்டத்தின் விவசாயக் காணிகளைத் துப்புரவு செய்வதற்கு 13.78 மில்லியன் ரூபாவும் விதைகள் வழங்க 19.95 மில்லியன் ரூபாவும் அடிப்படை வசதிகள் வழங்க 16.69 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் கிளிநொச்சியில் மீளவும் இயங்கி வருகிறது

(கிளிநொச்சி)

தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் தற்போது கிளிநொச்சி கச்சேரிக்கு முன்பாகவுள்ள பணிமனையில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் அக் கழகம் வெளியிட்ட செய்திகுறிப்பு வருமாறு,

போரினால் பாதிப்படைந்து மிகவும் துன்பமான நிலையில் உள்ள உரிமையாளர்களை உள்ளடக்கிய எமது கழகம் மீளவும் சீரான வகையில் இயங்கவுள்ளது.

முக்கியமாக பொதுமக்களின் நன்மையினைக் கருத்தில் கொண்டும் பொதுமக்களின் போக்குவரத்தினை இலகுபடுத்தியும் செயற்படுதலே எமது நோக்கம்.

தற்போது சீராக மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் யாழ்.-கிளிநொச்சி-வவுனியா பிரதேசங்களுக்குப் பயணம் செய்யும் பொது மக்கள் சீரற்ற கட்டணங்களைச் செலுத்தி பயணம் செய்கின்றனர்.

ஆகவே பொதுமக்கள் தங்களது தேவைகளை எம்மிடம் தொடர்பு கொண்டு போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். முற்றுமுழுதாக எமது கழகம் பொதுமக்களின் நன்மையினைக் கருத்தில்கொண்டே செயற்படும்.

இதில் போக்குவரத்துக் கட்டணமானது இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கட்டணத்தினையுடையதாகவே இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பொதுத் தேர்...

கட்சிகளும் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

அனைத்துக் கட்சிகளும் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு அரசியல் கொள்கைகளுக்கு ஏற்ப பொறுப்புகளை ஏற்றுச் செயற்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (ச-9)

## தமிழ்த்தினப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 13,14ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ச-14)

## புத்தளம்...

கருத்து வெளியிட்டுள்ளனர்.

கற்பிட்டித்தீவுகளைத் தவிர மட்டக்களப்பின் பாசிக் குடா, கல்குடா மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களும் இவ்வாறு வெளிநாட்டு நிறுவனங்களுக்குவழங்கப்படவிருப்பதாகநம்பத்தகுந்தத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## அரசியல்...

இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த வாய்ப்பாக அமைந் துள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய இலங்கைக்குள்தமிழர் உள்ளிட்ட அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் நிரந்தர தீர்வுத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றின் அவசியம் குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்கனவே வலியுறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஐ.நா.சபை...

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த அமர்வு எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இலங்கையின்மனிதஉரிமைகள் குறித்து குற்றசாட்டுக்கள் ஏதும் சுமத்தப்படுமானால் அவற்றை சட்டமா அதிபர் தலைமையிலான குழுவினர் எதிர்கொண்டு விளக்கமளிக் கவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## சீனாவிடமிருந்து இலங்கை...

அகற்றும் கருவிகளே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டன.

அதேவேளை சீனா வழங்கியுள்ள இராணுவ தளபாட உதவிகளில் சுமார் 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான கண்ணிவெடிகளை அகற்றும் கருவிகள் மற்றும் கண்ணிவெடிப் பாதுகாப்புகவசங்கள் அடங்குவதாக தெரியவருகிறது.

கண்ணிவெடிகளைக் கண்டுபிடிக்கும் 50 கருவிகளும், கண்ணிவெடிகளைப் பாதுகாப்பாக அகற்றும் 50 கருவிகளும் இந்த 50 மில்லியன் ரூபாய் இராணுவ உதவியில் உள்ளடங்கியுள்ளன.

இவற்றைவிட மேலும் பல இராணுவ தளபாடங்களையும் சீன அரசாங்கம் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய உள்ளிட்ட உயர் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சீனா வழங்கியுள்ள கண்ணிவெடி அகற்றும் கருவிகள் வடக்கில் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைக்கு பயன்படுத்தப் போவதாக இராணுவம் அறிவித்துள்ளது.

இதேவேளை சீனாவிடம் இருந்து ஆறு கனரக போக்குவரத்து விமானங்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தை நவீனமயப்படுத்தும் முயற்சிகளை ரஷ்யா மேற்கொண்டுவருகையில் தற்போது சீனாவிடம் இருந்தும் 6 கனரக இராணுவ போக்குவரத்து விமானங்களை கொள்வனவு செய்துள்ளது.

ரேபோபுறெப்ளர் இயக்கமுடைய எம் ஏ-60 ரக இராணுவ போக்குவரத்து விமானங்களை கடன் அடிப்படையில் சீனா அரசு வழங்க முன்வந்துள்ளதாக சியான் வானூர்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-5)

## பொன்சேகா...

பணிகள் நிறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். தமக்குக் கிடைக் கப்பெற்ற தரவுகள் மற்றும் இராணுவ சட்டப்பிரிவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ நீதிமன்றில் விசாரணை மேற்கொள்ளும் அதிகாரிகள் தொடர்பில் இது வரை தீர்மானிக்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## மேஜர் ஜெனரல்...

நிலையில் மானவடு இவ்வாறு வெளிநாடு சென்றுள்ளார். சரத்பொன்சேகாவின் கைது தொடர்பாக மானவடுவைத் தவிர ஏனைய அனைத்து இராணுவ அதிகாரிகளிடமும் வாக்கு மூலங் களைப் பெற்றுக்கொண்டுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் மானவடு தனது மனைவியை வெளிநாடு அனுப்பிவைத்தார். அத்துடன் மானவடு கடந்த சில தினங்களாக பெரும் மன உளைச்சலுடன் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## பொதுமக்கள் மீதான அழுத்தங்களை...

அதன் முக்கிய பகுதிகள் வருமாறு, முன்னாள் இராணுவ ஜெனரல் தற்போது இராணுவப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். அதனை போலவே வடக்கு, கிழக்கு மற்றும் தென்னிலங்கை பகுதிகளில் இருந்து கைது செய்யப்பட்டவர்களும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் எழுந்தமானமாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுபவர்களை பாதுகாப்பதில் நீதித்துறை செயல்திறனற்று உள்ளது. அது இல்ங்கையில் வழமையான ஒரு நிகழ்வாக மாறிவிட்டது.

இலங்கை நீதித்துறையின் செயல்திறனற்ற போக்கு பொதுமக்களை பாதுகாப்பதற்கு தவறியுள்ளது.

இலங்கையின் இறைமை தொடர்பான கூற்றுக்கள் இறைமையுள்ள நாட்டில் வாழும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவப் போவதில்லை.

சுயாதீன நீதித்துறை என்பது அரசின் அதிகாரங்களுக்கு அப்பால் பொதுமக்களின் உரிமைகளை பாதுகாப்பதாகும்.

ஆனால் 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டங்கள் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தையும் நீதித்துறையையும் கட்டுப்படுத்தும் அதிகாரங்களை வழங்கியுள்ளது.

அதன் அர்த்தம் என்னவெனில் ஒரு ஜனாதிபதியால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் அழுத்தங்களை நீதித்துறையினால் தடுக்க முடியாது என்பதாகும். எனவே நீதித்துறையினால் மக்களின் உரிமைகளை பாதுகாக்க முடியாது.

இங்கு உண்மை என்னவெனில் மக்கள் தமது உரிமைகளை இழந்து வாழ்கின்றனர் என்பதுதான். ஜெனரல்பொன்சேகாவின் கைது, பல ஆயிரம் பொதுமக்கள் நீதிக்குப் புறம்பாக தடுத்துவைக்கப்பட்டுள்ளது, பெருமளவான மக்கள் பலவந்தமாக காணாமல்போகச் செய்யப்பட்டது, நீதிக்குப்புறம்பான படுகொலைகள், துன்புறுத்தல்கள் போன்றவற்றிற்கான காரணம் இதுதான்.

அதாவது பொதுமக்களை பாதுகாப்பதற்கு நீதித்துறைக்கு அதிகாரம் இல்லை என்பதேயாகும். நீதித்துறையின் செயற்பாடு என்பது அதிகாரமுள்ளவர்களின் நடவடிக்கைகளுக்கு துணைபோவதல்ல. ஆனால் இலங்கையில் நீதித்துறைதனது செயற்பாடுகளை இழந்துள்ளது.

பொதுமக்களின் உரிமைகளுக்காக இன்று முன்னாள் பிரதம நீதியரசர் வீதியில் இறங்கி போராடுகின்றார்.

ஆனால் அவரின் குரல் பயனற்றது. ஏனெனில் அவரின் காலத்தில் கூட நீதித்துறை என்றால் என்ன என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

பொதுமக்களின் உரிமைகளை அதிகாரவர்க்கத்திடம் இருந்து அவரால் காப்பாற்ற முடியவில்லை.

மக்கள் அப்போது எதனை இழந்தார்களோ அது தற்போதும் தொடர்கின்றது. தற்போது முன்னாள் இராணுவத்தளபதி இராணுவ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலியாகொட காணாமல் போயுள்ளார். ஒன்பது வயது தமிழ் சிறுமி இராணுவ முகாமுக்கு அண்மையாக பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இலங்கையில் இழந்துபோனநீதித்துறையின் பிரதிபலன்கள் தான் இவை. இவர்களில் யாரையும்இலங்கை நீதித் துறையினால் காப்பாற்ற முடியவில்லை எனஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

இதோ! அரிய சந்தர்ப்பம்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
பாடசாலை அதிபர்களின் கவனத்திற்கு
பரீட்சை விடைத்தாள் (Fullscap Sheet)
உங்கள் பாடசாலை இலச்சினையும், பாடசாலையின் பெயரும் தரமான முறையில் அச்சிடப்படுவதற்கு
A 3 1 Ream 550/= மட்டுமே
மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்
முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.இல. 0212229285, 0777222258
(க-4602)

தேவை
நெல்லியடியில் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கேக் ஐசிங் செய்வதில் தேர்ச்சியுள்ள ஒருவர் தேவை.
உடன் தொடர்பு கொள்க. இயக்குநர்: 077 9143171
(க-4547)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.